அக்டோபர் 1934 மலர் 11—இதழ் 11

வருஷ சந்தா
ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்.

## "ஜகன்மோகினி" யின்

பன்னிரண்டாவது ஆண்டு

கொண்டாட்டம்

பல பரிசுகளும்

ஒரு வருஷ சஞ்சிகையும்

முற்றிலும் இனாம்

பிரவேசக் கட்டணமில்லை.

இதனுள்ளிருக்கும் விளம்பரத்தைப் படியுங்கள்.

OFFICE OF THE ... 23 FEB 1935 MADRAS

JC
m211, N225m
N 34. 11.11.
182970.

...மோகினி" ஆபீஸ்
...ரடித் தெரு,
...கேணி சென்னை
2

## பன்னிரண்டாவது ஆண்டுப் பரிசுகளின் விவரம்.

புது வருஷ சந்தாவை டிசம்பர்மீ 20-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின் வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

| | |
|---|---|
| முதல் பரிசு ரூ. 25 | 3-வது பரிசு ரூ. 10 |
| 2-வது பரிசு ரூ. 15 | 3-பரிசுகள் ரூ. 5 வீதம் |

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவதுடன், அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

# இன்னும் 50 பேர்களைத்தான்

இந்த ஆண்டுக்குச் சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ள முடியுமாதலால், நேயர்கள் உடனே சந்தாவை முன்பணமாக அனுப்பக் கோருகிறோம்.

அடுத்த ஆண்டு சந்தாவையும் சேர்த்தனுப்பினால் தபாற் செலவு மிகுதியாகு மென்பதைக் கவனியுங்கள்.


இரண்டாம்

பதிப்பு

வெளிவந்து

விட்டது.

## ஜெயஸஞ்சீவி

விலை

அணா நான்கு

நான்கு ரூபாய் பெறுமான

ருசியுள்ள துப்பறியும் நாவல்.

# கவலை நீங்கி களிக்க தருணமிதே!



"பார்வதி பரிணயம்"
நடித்து, பெயர் பெற்ற
ஷைனிங் ஸ்டார்ஸ்
ஸொஸைடியாரின்
இப்புதிய

## "விநோத விவாஹம்"

எனும் ப்ரஹஸநத்தை
N. 8260–N. 8263 களில் கேளுங்கள்!
8 பாகங்கள்; விலை ரூ. 11/- மட்டுமே.



### அனைவருக்கும் இலவசம்!

இந்நாடகத்தின் பாட்டுக்களும், வசனமும் அடங்கிய புத்தகங்கள் தமிழ், மலையாள பாஷைகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவைகள் இலவசமாக எங்கள் வியாபாரிகளிடம் கிடைக்காவிடில், எங்களுக்கு எழுதினால் தபால் செலவின்றி அனுப்பித்தருகிறோம்.

தி கிராமபோன் கம்பெனி
லிமிடெட்,
45. ஸௌத் பரேட், பெங்களூர்.

# நவராத்திரி இனி அடுத்த வருஷந்தான்.

ஆனாலும், ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் தமது ஆழ்ந்த அனுபவத்தையும், சாமர்த்தியத்தையும் காட்டியுள்ள இந்த ரிகார்டு உங்களையும், உங்களது குழந்தைகளையும் எப்பொழுதும் சந்தோஷப்படுத்தும்.

நவராத்திரியின் மகிமை, பொம்மை கொலுவு வைத்து, குழந்தைகளை சிங்காரித்து, அனுப்பி ஊரழைத்தல், பூஜை செய்தல், வந்தவர்கள் பாடுதல், வெற்றிலை பாக்கு, பக்ஷணம் கொடுத்தல் முதலியன ஒரு பக்கத்திலும் பஸவன், ஜவந்தரை சம்பந்தமான ஊர்கோலம், மேளம், பாண்டு, கோலாட்டம், குளக்கரை சம்பாஷணை, சாப்பாட்டுப் போட்டி, வேடிக்கை யெல்லாம் மற்றொரு பக்கத்திலும் ஒன்றுகூடிய இந்த ரிகார்டு உங்களுக்கு அடங்கா நகைப்பை யுண்டாக்குவதுடன், அந்த காக்ஷிகளை நேரில் கண்டும், கேட்டும் ஆனந்திப்பது போன்ற மகிழ்ச்சியை யுண்டாக்கு மென்பதில் சந்தேகமில்லை.

| | | |
|---|---|---|
| G. E. 352 | நவாராத்திரி கொலுவு<br>கோலாட்டம் (பஸவன்—ஜவந்தரை) | ரூ. 2-12. |

## கிராமபோன் உலகில் ஒரு புதிய வெற்றி

# சுகாதார ரிகார்டுகள்

"கொலம்பியா" வுக்காகப் பிரத்யேகமாக ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாளால் கவனஞ் செய்து பாடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| GE. 359 | குலத்தைக் கெடுக்கும் குப்பை மேட்டு<br>எழிலைக் குலைத்திடும் க்ஷய ரோகம் | ரூ. 2-12. |
| GE. 360 | கர்ப்பிணிகள் கவனிக்கத்தக்கவை<br>மக்கள் இன்ப வாழ்க்கை | ரூ. 2-12. |

---

## உங்களது ஆசிரியை—பாடகரின் மற்ற ரிகார்டுகளையும் கேட்டானந்தியுங்கள்

| | | |
|---|---|---|
| GE 197 | ஏழைமுகம் பாரய்யா - ஸிந்து பைரவி<br>போகுது பார் பணம் - நட பைரவி | விலை ரூ. 2-12-0 |
| GE 205 | சொல்லுவம் வைஷ்ணவன் - பியாக்<br>சத்யாக்ரகத்தியாகி - மாண்ட் | விலை ரூ. 2-12-0 |
| GE 222 | வெட்கமில்லையோ மனத்தில் - பியாக்<br>தாயே தந்தை யென்றும் - ராகமாலிகை | விலை ரூ. 2-12-0 |
| GE 236 | ஸந்தேகமு யாலரா 1. - கல்யாணி<br>" 2. - " | விலை ரூ. 2-12-0 |
| G. E. 289. | "எத்தனை ஜன்மங்கள்." ராகமாலிகை. | ரூ. 2-12-0 |

# ஆர்வ்ஸ் கொலம்பியா ஹவுஸ், மதறாஸ்

எல்லா "கோலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

காலை சுமார் பத்து மணி இருக்கும். கணகணவென்று மணி யோசை ஒலிக்கும் இரட்டை மாட்டு வண்டியொன்று அட்டகாஸ மாக வந்து நின்ற சப்தம் கேட்ட உடனே பெரியவர்களில் சிலர் "திருவேங்கடத்தான் பிள்ளையோடு வந்து விட்டான்'' என்றும்,சிறுமி யர்கள் "குருட்டு கிட்டு வந்து விட்டான் வேடிக்கைதான். வழவழ, கொழகொழ வென்று வேடிக்கையாகப் பேசுவான். ஐயோ, பாவம்! இந்த பொண்ணு நன்னாயிருக்கு'' என்று பரிகஸித்தும், அனுதாபப் பட்டும் பேசினார்கள்.

"பாகீரதி! எழுந்து வா! அதோ உன் மாப்பிள்ளையும் வந்து விட்டான்'' என்று முதல் நாள் முடிவு கட்டிய பெண்பிள்ளை கூப் பிட்டாள். கையில் இருந்த முறத்தையும், திடைப்பத்தையுங்கூடக் கீழே போட மறந்த பாகீரதி அந்த வரிசைகளோடு மாப்பிள்ளை யைப் பார்க்க ஓடி வந்ததைக் கண்ட ஒருத்தி அவற்றைப் பிடுங்கிப் போட்டாள். மாப்பிள்ளை என்னவோ ஷோக்காகத்தான் நிற்கிறார்• அவரைச் சுற்றி அனேக பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் நிற்கிறார்கள். சிறுவர்களும், சிறுமிகளும் தாங்கமாட்டாத சிரிப்புடன் "அடேடேய்! மாப்பிள்ளையின் வாயைப் பார்த்தாயாடா! ஊரைப் பார் என்றால் பறச்சேரியைப் பார்க்கிறது. பல்லெல்லாம் வெளியில் ஆணிபோல நீட்டிண்டு இருக்குடா! அடெ கண்ணெ பாத்தியாடா! ஒத்தைக் கண்ணண்டா! பேஷ்! வேடிக்கை.'' என்று தலை கால் தெரி யாமல் குதிக்கிறார்கள்.

சரிகை உருமாலுடன் பகட்டாக நிற்கும் குருட்டுக் கிட்டு வைப் பார்த்ததும் பாகீரதிக்கு முதலில் கலுக்கென்றது. கண்ணும் வாயும் வெகு கோரமாகத் தெரிந்தன. உடனே சரிகை யுருமாலும், காதில் மின்னும் கடுக்கனும், மோதிரங்களும் கண்ணிற்குப் பட்ட தும் மோகம் இப்படித் திரும்பி விட்டது. "ஆமாம். முகம் சிறிது

---

தாய் நாட்டில் பற்றற்ற மனிதர்களின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும் சுய நலமும் அடிமைத்தனமும் ஒரு விதமான குயுக்தி யும் கலந்ததாக விருக்குமே யன்றி ருசி என்பதே எற்படுவதில்லை. அத்தகை யோர்களின் காரியமும் அதே கதியைத்தானடையும்.

வித்யாசமா யிருந்தால் என்ன? பணம் நிறைய இருக்கிறது. அது தானே வேண்டும். கழுத்திற்குக் கீழே மாப்பிள்ளை யழகுதான். முகம்...ம்ச்ச......பரவா இல்லை.'' என்று தனக்குள்ளே முடிவு கட்டி விட்டாள்.

பையனே தனது ஒத்தைக் கண்ணால் அங்கு நிற்கும் பெண் களை எல்லாம் பார்க்கிறன். தனக்கென்று நிச்சயித்த பெண் இவர்க ளில் யாராக விருக்கும் என்று கவனித்து அசட்டுச் சிரிப்பு சிரிக் கிறன். இதற்குள் இரண்டு பெண்கள் "கல்யாணப் பெண் எங்கே! மாப்பிள்ளை பார்க்க வேண்டாமா?'' என்கிறர்கள். இந்த தடபுட லில் பாகீரதி ''ப்ரேமாமணீ! ப்ரேமாமணீ! இங்கே வாடியம்மா! எங்கே இருக்கிறய்? இப்படி வா!'' என்று வெகு அருமையாக அழைத்தாள்.

இந்த மாட்டு வண்டி யோசையைக் கேட்ட உடனேயே ப்ரே மாவின் ஹ்ருதயத்தைக் கலக்கியது. அவ் வீட்டில் ஒரு புறமுள்ள ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். மாப்பிள்ளையின் உருவம் தெரியவில்லை எனினும், அங்கு நடக்கும் பெரியோரின் பேச்சுக்க ளும், சிறியோரின் பரிகாஸ ஆரவாரமும் காதில் பட்டன. "ஐயோ, விதியே! ஈசா!'' என்று விசனித்திருந்த தறுவாயில் பாகீரதி அழைத்த குரல் கேட்டதும் அலறினள். தன்னைக் கொண்டு அங்கு நிற்கவைக்கப் போகிறளே! என்ன செய்வது என்கிற கிலி பிடித்து விட்டது.

அவளால் ஓரடிகூட நகர விடாது ஏதோ தடுத்து வதை செய் வதுபோலாகி விட்டது. தான் வரமாட்டேன் என்று கூறி விட லாமா என்று நினைத்தாள். இதற்குள் பாகீரதியும், மற்ற இரு பெண் களும் வந்து " வாடியம்மா வெக்கமாகத்தா னிருக்கும். கல்யாண மென்றல் இப்படித்தான் இருக்கும். எங்களை எல்லாங்கூட இப்ப டித்தான் அழைப்பார்கள். வா வா!'' என்று கூறி கையைப் பிடித்து

---

எந்த மனிதரும் தம்முள் அழுக்தி கிடக்கும் பலவிதமான கொனிஷ் டைகளையும், குறும்பு எண்ணங்களையும், துவேஷ புத்தியையும், எத்தனை சாமர்த்யமாக மூடி வைத்தாலும் அது வெளியாகாது போவதில்லை. அந்த

இழுத்துச் சென்று குருட்டுக் கிட்டுவின் எதிரில் நிற்க வைத்து 'அதோ பாரு மாப்பிள்ளை' என்று ஒருத்தி கூறினாள்.

பாகீரதி பக்கத்தில் பல்லைப் பிளந்துகொண்டு நிற்கிறாள். ப்ரேமா இந்த கண்ராவி மாப்பிள்ளையைப் பார்த்த உடனே கதி கலங்கி விட்டாள். கண்களோ சுழன்று கிறு கிறுத்து விட்டன. "ஐயோ! இந்தக் குருட்டை—கோர ஸ்வரூபத்தை, மொண்டியை, கோண வாயையா நான் மணக்க வேண்டும்? ஹா! ஈசா!" என்று தனக்குள் கலங்கியவாறு திகைத்துக் கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

"இச் சமயம் இது கல்யாண வீடு போலத் தோன்றவில்லையே! ஒரு அணா, இரண்டணா டிக்கட்டு வைத்து வேடிக்கை பார்க்கும் கொட்டகையைப் போலன்றோ இருக்கிறது! ஐயோ, பாவம்! அந்த பெண் ரதிபோலன்றோ நிற்கிறாள். அவளுக்கா இந்த குருட்டை, மொண்டியை, கோணவாய் ஊமையனை—கட்டப் போகிறார்கள்? சீச்சீ! பெற்ற தாயா இவள்! இவள் பெரும் பேய்தான். மகா கொடும் பாவி. ஒருவனுடன் கூடி இல்லற வாழ்க்கை நடத்தவேண்டு மென்றால் இத்தகைய மனிதனுடன் இன்பமாய் எவ்விதம் வாழ முடியும்? ஐயோ பாவம்!" என்று அனுதாபப்பட்ட சிலரும் அங்கிருந்தார்கள்.

பிரேமாவைப் போலவே உள்ள இளம்பிராயத்துக் கன்னிகைகள், மணம் ஆனவர்கள் எல்லாம் இக் கல்யாணக் கூட்டத்தைக் கண்டு திகைத்து வருந்தாம லிருக்க முடியுமா? "ஐயோ! அந்த பெண் முகத்தைப் பாரேன். கொலை செய்வதற்கு நிறுத்தியுள்ளவளின் முகம் போல விருக்கிறது. கண்ணில் நீர் பெருகுகிறது எல்லாம் பாழும் வறுமையின் கோலந்தான்...உம். அதை மட்டும் கூற முடியாது. பணத்தின் பேராசை......பணக்கரரர்களின் வஞ்சனை எண்ணம்......பெற்ற தாயின் புத்தி கெட்ட தன்மை. இவைகள் ஒருங்கு கூடி இந்த இள மங்கையின் ஆவியை தவிக்கச் செய்கின்றன.

---

எண்ணங்களை அவர்களின் பார்வையிலோ, பேச்சிலோ, செய்கையிலோ தம்மை யறியாது தாமே காட்டிக்கொள்ளும்படிச் செய்துவிடுகிறது. நாற்றத்தை மறைக்க முடியுமா?

நானக விருப்பின் திமிறிக்கொண்டு ஓடிவிடுவேன்......நானக விருப்பின் பிராணனை விட்டு விடுவேன்......ஐயையோ! ஆயிசு காலம் பரியந்தம் இந்த ஊமை, குருடு, மொண்டியின் முகத்தில் முழித்துக் கொண்டு யார் அழுது சாவது? அதை விட இப்போதே சாவது மேல்......

என்று ஒவ்வொருவரும் தம் தம் அபிப்பிராயங்களை குசு குசு வென்று வெளியிட்டுக்கொண்டு பேசுகிருர்கள். வீடே இரண்டு பட்டு ஓரே சத்தமும் அமர்க்களமுமாக விருக்கிறது. இந் நிலைமையில் பிரேமாவின் வாழ்க்கை நிலையான நாடி எவ்வளவு வேகமாக அடிக்கிறதென்பதைக் கூறவேண்டுமா? ஹ்ருதயம் துடிக்கிறது. கண்ணைத் திறந்து பார்க்கவே முடியவில்லை. ஆகாயமும் பூமியும் ஓரே சுற்றலாகச் சுற்றுகிறது. அவள் தலை குனிந்துவிட்டாள்.

கண்ணீர் முத்துப் போல் உருண்டு கீழே பூமியில் விழுந்து ஓடுகிறது. பூதேவியைக் கண்ணீரால் அபிஷேகம் செய்வித்து "என்னுடைய குறையை நீயும் தீர்க்காவிட்டால் எனக்கு வேறு யார் கதி? மானிட உருக்கொண்டு பெற்ற தாயோ அறிவிலியாய், மக்களின் சுக துக்க மறியாது பேதையாகி என்னை துன்பக்:கடலில் ஆழ்த்த இன்பமுடன் மனமுவந்து முன் வந்துவிட்டாள். அவளிடம் நான் முறையிடுவதெல்லாம் விழலுக் கிரைத்த நீரையே ஒக்கும். மகா கொடிய பாபங்களையும், பயங்கரங்களையும் தாங்கிச் சகிக்கும் சக்தி பெற்ற அன்னையாகிய நீ என் துயரத்தைக் களைந் தெறியமாட்டாயா? இல்லையேல் உன்னேடு (மண்ணேடு மண்ணுய் மங்கிவிட) கலந்துவிடவாவது கிருபை செய்யமாட்டாயா?'' என்று வேண்டுவது போல அவ்வளவு கண்ருவியாக விருக்கிறது.

மணமகன் எங்கே தன் குளறு வாயைத் திறந்துவிடப் போகிருனே என்கிற பயத்தினல் தகப்பனர் பக்கத்திலேயே நின்று காதில் உபதேசம் செய்துகொண்டே இருக்கிருர். அதையும் மீறி

---

ஒரு வித்துவானின் விபரீத போக்கைப் பாருங்கள். ஒரு மனிதன் எத்துணை கல்வியில் வல்லவனுக இருப்பினும் அதனுல் பயனில்லையாம். தாம் அணியும் படாடோபமான கால் சட்டை, மேல் சட்டை முதலியவைகளால்

குருட்டு கிட்டு, " அப்பா! அப்பா! எம் பொந்தாத்தி இவதானே. ஏன் என்னோடே பேழாதே இழுக்கா! கழியாணம் ஆன அப்பழும் பேழுவாழா...என்று வழவழா, கொழகொழா வென்று தன்னுடைய சமத்தைக் காட்டுகிறாள். குழந்தைகளோ, கபக்கென்று கை கொட்டி நகைக்கிறார்கள். இதற்குள் அவன் பிதா அதை யடக்கி விட்டார்.

இந்த சுப்ரதீபத்தையும் பார்த்த பிரேமாவுக்கு இன்னு மதிகரித்த விசன முண்டாகிவிட்டது என்று கூறவேண்டுமா? அதற்கு மேல் அங்கு நிற்கவும் பார்க்கவும் அவளால் முடியவில்லை. ஆகையினால் வெகு துக்கத்துடன் தன்னைப் பிடித்திருந்த அம்மாளின் கையை உதறிக்கொண்டு சடக்கென்று போய்விட்டாள். "கழ்யாண பொண்ணு ஓழழா ஓழழா...அப்பா! ஓழிப் பூழ்ழா...பூழ்ழா: பிழி, பிழி, நானு ஓழிப் பிழிக்கிழேன்...என்று கல்யாண மாப்பிள்ளை தன்னருமையான நொண்டிக் கையை ஆட்டிக்கொண்டு ஓடக் கிளம்பினான்.

இதற்குள் அவன் தந்தையின் ஐந்து விரல்களும் ஒன்றுகச் சேர்ந்து பையன் தலையில் பதிந்ததும் அவன் ஸ்க்ரூவால் தடுத்து நிற்கப்பட்டான். முதல் நாள் இந்த அற்புதமான வரனை நிச்சயம் செய்த மகா பாக்யவதியான அம்மாளுக்குக் கோபம் நான்காம் அவதாரம் போல வந்துவிட்டது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து குருட்டுக் கிட்டுவின் கரத்தைப் பிடித்து தரதரவென்று இழுத்து நிறுத்தி சைகையினாலேயே வைது கையைச் சுடுக்கினாள்.

கண்ணையும், மூக்கையும் பிசைந்துகொண்டு கல்யாணப்பிள்ளை பெரிதாக அழக் கிளம்பிவிட்டான். இவனுடைய அபாரமான சமத்தை யடக்குவதற்கு பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது. "ஏண்டீ, பாகீரதி! ஓம் பொண்ணுக்கு இத்தனை தைரியமா! வெகு அழகு. கூப்பிடுடீ! இன்று நல்ல நாளாக இருக்கிறது: நிச்சயதார்த்

தான் கவுரவமாம். அப்படியாயின் கல்வி வாசனையே அறியாத ஒரு மூடனுக்கு ஆடம்பரமான உடைகளைப் போட்டு வித்துவான், பண்டிதன் முதலிய பட்டங்களைக் கொடுத்துவிடுவதுதானே! இந்த பட்டதாரி ஒருகால் இதற்

தத்தைச் செய்துவிடலாம். யோசிக்காதே; இந்தா: இதோ 500 ரூபாய் உனக்கு கைச் செலவிற்கு ரொக்கமாகக் கொடுத்து விடுகிறேன்; பெண்ணுக்கு நகைக்காக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுக்கிறேன். கல்யாணத்தைத் தன் சொந்த செலவில் செய்கிறு ளும். இதோ 2000 ரூபாய் வாங்கிக்கொள்ளு.'' என்று கூறி பாகீரதியி னிடத்தில் இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டைக் காட்டினுள்.

தன் வாழ்நாளில் ஒரு பத்து ரூபாய் நோட்டைத் தனக் கென்று பார்த்தறியாத பாகீரதி இந்த நோட்டுக்களைப் பார்த்த வுடன் தன்னையே மறந்துவிட்டாள். மாப்பிள்ளையே ஒரு ஓச்சமு மின்றி மன்மத வடிவாகக் காணப்பட்டான். தன் பெண்ணின் துயரத்தை அடியோடு மறந்துபோய் தனக்குப் பெரும் அதிர்ஷ்ட காலம் வந்துவிட்டதாக எண்ணிக் குதிக்கவும் தொடங்கிவிட்டாள் என்றே கூறவேண்டும். மறு பேச்சின்றி பக்கத்திலுள்ள பலர் சாக்ஷி யாகப் பணத்தை வாங்கி வைத்துக்கொண்டாள்.

பணம் வந்துவிட்டவுடனேயே தக்க பக்க பலமும் தைரியமும் உதயமாகி பாகீரதியின் தேகத்தையே ஒரு குலுக்கு குலுக்கியது. எஜமானியினிடம் ரூபாயைக் கொடுத்து பத்திரப்படுத்திவிட்டாள். அவ்வளவுதானே தன்னுடைய முதல் கோரிக்கை. அது நிறைவேறிய பிறகு கவலை ஏது? உடனே பெண்ணைத் தேடிக்கொண்டு சென்றுள்.

அந்தோ! பரிதாபம்! பெண்ணின் நிலைமையைக் கூறவேண் டுமா? ஒரு மூலையில் படுத்துக்கொண்டு தேம்பித் தேம்பி யழுகிறுள். சுற்றுமுற்றும் சிறிய பெண்களும், பெரியவர்களும் சூழ்ந்து நின்று தம் தம் மனம் போனவாறு அனுதாபப் படுவோரும், குற்றலாகக் குறை கூறுவோரும், பரிகஸிப்போரும், கோபித்து சூடாகப் பேசு வோரும், கண்ணைத் துடைத்து மூக்கைச் சிந்துவோரும், பாகீரதி யைத் திட்டுவோரும் பலவிதமாக இருக்கிறுர்கள்.

இந்நிலைமையில் பாகீரதி பணத்தால் பூரித்த மலர்ந்த முகத்

கென்று ஓர் பட்டம் வழங்கும் சாலை சிருஷ்டிப்பாரோ என்று மூடர்கள் எதிர்பார்க்கிறுர்களாம்.

திடன் ஓடிவந்து பிரேமா இருக்கும் நிலைமையைக் கண்டு ஆத்திரமும், வெறுப்பும் கொண்டு "அடீ பயித்தியக்காரப் பெண்ணே! நீ சந்தோஷமாக உட்கார்ந்திருப்பாய் என்றல்லவோ நான் எண்ணினேன். அப சகுனம் போலப் படுத்து அழுகிறாயே! சீச்சீ! புத்தி கெட்டதே! எழுந்திரு. தலை பின்னிக்கொண்டு முகம் கழுவிப் பொட்டு வைத்துக் கொண்டு வா: நிச்சயதார்த்தம் ஆகவேண்டும். ஏன் அழுகிறாய்? கொஞ்சம் ஒச்சமானால் என்ன பிரமாதம்? ஒச்சமில்லாத சிறு பிள்ளையாய்த் தேடி உன் தந்தைக்கு நான் வாழ்க்கைப் பட்டதன் பயனால் என்ன வாரிக்கொண்டேன்? கை நிறைய பணமும், வீடும், வாசலும், நிலமும், புலமும், தோட்டமும், தொறவும் பச்சினு இருக்கையில் கவலை என்ன? துக்கமென்ன? பணக்காரியாகி விட்டால் பத்து பேருக்கு எடுப்பாக ஆகிவிடுகிறாய். உன் வயத்தில் ரெண்டு புழு வைத்துவிட்டால் உனக்கு மிஞ்சிய மகாராணி யார் இருக்கப் போகிறார்கள்?" என்று வெகு உருக்கமாயும், அபார புத்திசாலித்தனமாயும் கூறினாள்.

எரிகிற கொள்ளியை ஏறிட்டுத் தள்ளுவது போல இவள் உரைத்த மொழிகள் பிரேமாமணிக்குக் கடுந்தீயாகவே இருந்தன. வீடோ கல்யாண வீடு. மனிதர்களோ குழுமிக் கிடக்கிறார்கள். தாயோ பரம முட்டாள். தன் துயரமோ கரை புரண்டுவிட்டது. வாயைத் திறக்கவும் வெட்கம் பாதிக்கிறது. இந் நிலைமையில் பிரேமா என்ன செய்வாள் பாவம். தாமரை இலைத் தண்ணீர் போலத் தவிக்கிறாள். தன்னால் கூடியவரையில் தன்னை சமாளித்துக் கொண்டு தைரியமாய் தன் தாயை நோக்கி "அம்மா! நீ மனித வர்க்கத்தில் பிறந்தவள்தானே? உனக்கு மனம் என்பதும், ஈவிரக்கம், பச்சாத்தாபம் முதலிய ஏதும் இல்லையா? எல்லாம் உலர்ந்த கட்டையாகவா ஆகிவிட்டது? அம்மா! உனக்காக இல்லாவிட்டாலும் பிற

---

கர்வமும், உள்ளுக்குள் த்வேஷமும் ஒன்று கூடிய மனிதர்களுக்குச் சில பட்டம் வந்துவிடின் அவர்கள் பிறரிடம் இல்லாதவற்றைக் குற்றமாகக் கண்டுபிடித்துப் பேசிவிட்டால் கிரீடம் வந்த பாவனையாக எண்ணிவிடுகிறார்கள். இதன்பயன் தனக்கே எத்தனை தூரத்திற்கு அவமதிப்பு என்பதை அந்த கர்விகள் அறிவதில்லை.

ருடைய மன வேதனையையும், தவிப்பையும் பார்த்த பிறகு கூடவா உன் மனம் இளகவில்லை. உன் உதரத்தில் பத்து மாதம் தாங்கிச் சுமந்தாயே, அந்த சுமந்த பாசமுமா உனக்கில்லாது வற்றி உலர்ந்து போய்விட்டது! ஐயோ! நீ என்னைப் பெற்ற தாயாக விருந்து நீயே இத்தகைய கொடும் பாறையை என் தலையில் புரட்டப் பார்க்கையில் இந்த கோராமையை நான் வேறு யாரிடம் சென்று முறையிடுவேன்? முறையிட்டால்தான் என்ன? அதைக் கண்ட பிறர் உன்னையும் என்னையும் கைகொட்டி நகையார்களா? ஐயோ! இந்த சங்கடத் திற்கு நான் ஆளாகமாட்டேன்.

அம்மா! நீ கேவலம் முட்டாளாக விருப்பதனாலேயே என் னருமைத் தந்தையை பலி கொடுத்து விட்டாய். அவர் உயிருட னிருந்த வரையில் வருத்த சாகரத்தில் தவித்து உயிரும் நீத்தார். நீ அந்த மாபெரும் சோதனையைக் கண்ட பிறகும் புத்தி வராமல் மனந் துணிந்து உன்னிரு கைகளாலும் என்னையும் கவலைக் கடலில் தள்ளப் பார்க்கிறாய். உன்னுடைய அசட்டுத்தனத்தினால்—மூளை கெட்ட தன்மையினால்—என்னையும் இழந்து விட்டாயானால் உன் கதி பிறகு என்னவாகும் என்று சற்று யோசித்துப் பாரு. மக்களுக் குச் சத்ரு மாதா பிதா என்கிற பட்டத்தை நீ வாங்காதே! இந்த பணத்திற்கு ஆசைப்படாதே! இன்று உன்னைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பவர்களெல்லாம் இதுவரையிலும் உனது கஷ்டத் திற்கு உதவினார்களா! இனியாவது உதவுவார்களா! ஒருக்காலும் உதவமாட்டார்கள். உன் விதிதான் உனக்கு வழி காட்டும். மோசம் போகாதே! அந்த அங்கஹீனனுக்கு எப்படியாவது ஒரு பெண் ணைக் கட்டி அவன் குறையைத் தீர்க்க வேண்டிச் செய்யும் சூழ்ச்சி இது. இதை நீ நம்பாதே! நம்பி பிறகு புலம்பாதே! நீ புறப்படு. உடனே நாம் வந்த வழியே செல்வோம். இங்கு வந்ததன் பலன் போதும். இனி அரை நிமிட நேரமும் நாம் இங்கு இருக்க வேண்

---

எத்தனை உயர்தரமான கல்விகளைக் கற்ற பட்டதாரிகளாயினும்—வித்து வான்களாயினும்—தன்னடக்கமும், சபையின் நோக்கமறிதலும், விஷயங்க ளைக் கூறும் சாதுர்ய திறமையும் இல்லாவிடில் அவருடைய பட்டம் எதற்கு? சிறிய நரியைக் கொல்லுதற்குக் கோதண்டத்தை உபயோகிப்பது போல

தயவு செய்து

# புது வருஷ சந்தாவை

முன் பணமாக அனுப்புங்கள்.

வி. பி. யில் அனுப்பச்

சொல்வதால் உங்களுக்கு

அனாவசியச் செலவும்,

கால தாமதமுமே.

நமக்குத் தெரிந்த வரையில்

## தமிழ்ப் பத்திரிகையுலகில் இதுவரை நடைபெறாத சம்பவம்

<u>இனாம்</u> <u>முற்றிலும்</u> <u>இனாம்</u>

## இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்படும் நாவல்கள்

நமது

## ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இதர சஞ்சிகைகளைப் போல நாமும் ஜீவிய சந்தா ஏற்படுத்த வேண்டுமென்று அநேகர் கோருவதால், ரூ. 25/- முன்பண மனுப்புகிறவர்களை நமது ஜீவிய சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்வதுடன், இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களையும் இனாமாக அனுப்புவோம்.

# " வர்த்தக ஊழியன் "

வர்த்தக முன்னேற்றம் கருதி வெளிவரும் சிறந்த மாதப் பத்திரிகை.

இந்தியா, இலங்கை, பினங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலுள்ள பிரபல வர்த்தகர்களாலும் மற்றும் பல பொது மக்களாலும் நன்கு ஆதரிக்கப் பட்டு, பிரதி ஆங்கில மாதமும் முதல் வாரம் பல ஆயிரக்கணக்கான இதழ்களுடன் வெளிவருவது.

வர்த்தக ஊழியனில்

வர்த்தகர்களுக்கு இன்றியமையாத பல கட்டுரைகள் சாமான்களுக்கு ரெயில்வே கட்டணங்கள், வர்த்தகத்துணுக்குகள், நவீன கதைப் பகுதி வர்த்தகக்குறி வழக்கு முதலிய பல விஷயங்கள் வெளிவரும்.

வர்த்தக ஊழியனில்.

விளம்பரம் செய்வதினுல் தக்க லாபத்தை யடையலாமென்பது திண்ணம். குறைந்த செலவில், நிறைந்த லாபத்தையடைய விரும்பினுல், வர்த்தக ஊழியனில் விளம்பரம் செய்யுங்கள்.

விளம்பர விகிதங்களுக்கு மானேஜருக்கு எழுதுங்கள்.

வருட சந்தா.

உள் நாட்டிற்கு ரூ 1—0—0. வெளி நாட்டிற்கு ரூ 1—8—0.

மானேஜர்,

வர்த்தக ஊழியன், திருச்சினுப்பள்ளி.

---

# " விநோத நேசன் "

## (தமிழ் ஹாஸ்ய மாதாந்திரசஞ்சிகை)

ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 5-ம் தேதி வெளிவரும்.

பத்திரிகையை விற்பனை செய்ய எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

தனிப்பிரதி விலை அணு 1. வருட சந்தா அணு 12.

" விநோத நேசன் " ஆபீஸ்,

திருவல்லிக்கேணி.

---

# " வஸந்த விகடன் "

## ஓர் உயர்ந்த ஹாஸ்ய மாதப் பத்திரிகை

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கட்டுரைகள், கதைகள், படங்கள் அடங்கியது.

வருட சந்தா ரூ. 1/8 தனிப்பிரதி. அணு 1½

ஒவ்வொரு ஆங்கில மாதமும் 20-ம்தேதி வெளி வரும். ஏஜண்டுகளில்லாத ஊர்களுக்கு திறமை வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைக்கு உடனே எழுதுக.

மானேஜர்

" வஸந்த விகடன் " ஆபீஸ் மதுரை.

டாம்". என்று தன்னையும் மறந்து, பொங்கும் விசனத்தின் வேகத்துடன் தைரியமாகக் கூறினள்.

இதைக் கேட்ட பாகீரதிக்கு மனம் இளக வேண்டியிருக்க, அபாரமான ஆத்திரம் சீறிக்கொண்டு வந்துவிட்டது, "அடி! பாதகி! நீயோடி என்னை மகிழ்விக்கப் பிறந்த பெண்? என்னைச் சதா வருத்திக்கொண்டு கண்ணீர் வடியச் செய்வதுதான் மக்களின் தருமமா! என் மனது ஒரு வேளையாவது சந்தோஷமடையச் செய்ய வேண்டாமா! ஏதோ மகா மேதாவிபோலப் பிரஸங்கம் செய்ய ஆரம்பித்து விட்டாயே! நான் பட்ட கஷ்டமெல்லாம் போதும். இனியும் லக்ஷியமற்று அலக்ஷியக் கட்டையாய் உலகில் இருக்க வேண்டுமா? நான் இதோ என் பிராணனை விட்டு விடுகிறேன். அம்மாமீ! அந்த பணத்தை அவாளிடத்திலேயே சேர்த்து விடு" என்று பெரிய ஆகாத்யம் செய்து அழுதபடியே, தடதடவென்று வெறி கொண்டவள் போல ஓடினள்.

இந்த விபரீதத்தைக் கண்ட எல்லோரும் "ஐயையோ! இதென்ன அக்ரமம்! சுபமான கல்யாண வீட்டிற்கு இச் சனியன்கள் வந்ததும் போதும்; சண்டையிட்டுக் கொண்டு அசுபமாகப் பேசி ரகளை செய்வதும் போதும். கல்யாண வீட்டில் இப்பாவி செத்துக் கிடந்து எழவெடுக்கவா இங்கு வந்தாள்? அடி ப்ரேமா! உன்னுடைய பிரஸங்கமும், யுக்தியும் ரொம்ப அழகாயிருக்கு. பெத்த தாயாரின் மனத்தை நோக வைத்து அவளைக் கொலை செய்வதுதான் உன் அபாரமான சாமர்த்தியத்தின் லக்ஷணமோ! போதும் போதும். உன் தாயாரை இழுத்துக் கொண்டு வா! இங்கு உங்கள் சண்டையும் பூசலும் வேண்டாம். தாயார் சொற்படி நடக்க புத்தி கெட்டவளுக்கு வாய் ஒரு கேடு. நீ பணத்திற்குத் திண்டாடும்போதே இவ்வளவு கர்வத்துடன் பேசுகிறயே! ஏதேனும் ஐவேஜு இருந்துவிட்டால் என்னதான் செய்வாயோ?" என்று காச்சு மூச்சென்று கத்தினர்கள்.

---

இருக்கிறது. சின்ன பள்ளி மாணவர்களின் முன்னிலையிலும், பட்டிக்காட்டு மக்களின் முன்பும் இலக்கணத்தை அளந்து பொருளே விளங்காது பேசி தன்னுடைய பாண்டித்தியத்தைக் காட்டுவது.

பாக்கு வெட்டியின் மத்தியிலகப்பட்ட பிரேமா என்னதான் செய்வாள்? மனமோ உருக்கிய ஈயம்போலத் தத்தளிக்கிறது. ஆதி முதல் காட்டி வந்த பாணத்தையே பாகீரதி இப்போது மும்முற மாகக் காட்டி விட்டாள். "மதி கெட்ட இரண்டாங்கட்டான் உயிரை அந்த ஆவேசத்தில் மாய்த்துக் கொண்டாலும் கொள்ளு வாள். சீச்சீ! தாயைக் கொன்ற பாதகம் என்னை வந்து சூழ்ந்து கொள்ளுமல்லவா! இந்த ஒரு விஷயத்திற்குப் பயந்தல்லவோ நான் இதுபரியந்தம் பட்ட கஷ்டங்களெல்லாம். நான் இம் மண்ணுலகில் பிறந்ததே துன்பப்படுவதற்காகத்தான் பிரமன் அன்றே என் தலை யில் எழுதிவிட்டான். அது இன்று பொய்த்து விடுமா! வேண் டாம். எனக்குச் சுகம் வேண்டாம்; தாயைக் கொன்ற சண்டாளி, பாவி, கிராதகி, கொலைகாரி என்கிற வசையும், பழியும், பாபமும் வேண்டாம். என் விதியை வெல்ல யாரால்தானாகும்? உம்...இது தானே என் முடிவு...ஆம்...ஆம்...இதுதான் உன் முடிவு என்று என் மனச் சாட்சி கூறுகிறது......சீச்சீ! வாழ்க்கையை வெறுத் தேன். இனி ஏன் தாமதிக்க வேண்டும்?'' என்று தனக்குள்ளேயே ஓர் முடிவைச் செய்து கொண்டு துணிந்து தெளிந்துபோய் தாயார் சென்ற வழியே ஓடினாள்.

தன்னறிவு கெட்டவர்களுக்கும்—தான் பிடித்ததைச் சாதிக் கும் மூர்க்க குணமுடையவர்களுக்கும்—பிறர் சொல்லை சற்றும் காதில் வாங்காது அலக்ஷியமாகத் தன் போக்காக நன்மை தீமை அறியாது நடக்கும் அற்ப கர்விகளுக்கும் அகம்பாவம் மட்டும் குறையாது. தடபுடல் செய்து பிறரை மிரட்டும் பேய்க் குணம் நீங்காது. இந்த அனுபவத்தை எத்தனையோ இடத்தில் காணலாம். இந்த அருமையான குணங்களுக்கே உறைவிடமாகிய பாகீரதியின் செய்கையைக் கூறவேண்டுமா?

கிணற்றினருகில் சென்று துணியை இழுத்துக் கட்டிக் கொண்டு தாம்பக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு விழுவதற்கு

அன்னியரிடம் தாம் கொண்டுள்ள அடிமைப் புத்தியின்படியே நடை முறையில் தாம் சலாம் குலாம் என்று காக்காய் பிடிக்கும் தம்முடைய நடத்தையையே பிறருக்கு போதிப்பதோடு அந்த அடிமைப் பழக்கந்தான்

ஆயத்தமா யிருக்கிருள். உண்மையில் விழுபவர்கள் இப்படி இருக்க மாட்டார்கள். எனினும் இத்தகைய பேய்க்குண மிருப்பவர்கள் தங்கள் பிடிவாதத்தைச் செய்தே காட்டித் தீர்த்து விடுவார்கள். அந்த பயத்தினுலேயே ப்ரேமா வெகுவாய் தன்னுடைய துயரத்தைச் சகித்துக் கொண்டு தாயின் காலில் விழுந்து காலே கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "அம்மா! அம்மா! நான் புத்தி பிசகால் கூறிவிட்டவைகளே மறந்து விடு. என்னை மன்னித்து விடு. உன்னுடைய இஷ்டப்படியே நான் நடக்கச் சித்தமாக விருக்கிறேன். ஏதோ இளமையின் திமிரால் கூறிவிட்டேன். அம்மா! நீ உள்ளே வா!" என்று கண்ணீர் வடியக் கதறி யழைத்தாள்.

அருகில் வேடிக்கை பார்க்கும் கும்பலோ திருநாள் கூட்டமென்றே கூறலாம். பாகீரதியை தடுத்துத் தேறுதல் கூறுவோரும், ப்ரேமாவைத் திட்டுவோரும், பாகீரதிக்கே நல்ல புத்தி கூறுவோருமாக விருக்கிருர்கள். பிரேமா காலில் விழுந்து வேண்டியதும் பாகீரதி கிணற்றுக் கயிற்றை விடாமல் "நான் ஏன் இனி இவ்வுலகத்தில் உயிர் வாழவேண்டும்? நான் சாகிறேன்; சாகிறேன்" என்று மீண்டும் தன் பிடிவாதத்தைக் காட்டினுள். மூடர்களின் வழக்கமான செய்கைகளில் இது முதன்மை பெற்றதல்லவா!

பிரேமா கெஞ்சிக் கூத்தாடி தூபதீபமெல்லாம் போட்டு பாகீரதியை உள்ளே அழைத்துக்கொண்டு வந்தாள். அதன் பிறகு பாகீரதியின் முகம் மலர்ந்து விட்டதென்று கூறவேண்டுமா? தன் மனோரதம் நிறைவேறி விட்டதை எண்ணி அளவிலா மகிழ்ச்சி கொண்டாள். உடனே நிச்சயதார்த்தத்திற்கு ஆரம்பித்து விடலாம். என்று பெரிதோர் உத்திரவும் போட்டு விட்டாள். எம கிங்கரர்களைப்போல சில ஸ்திரீகள் ப்ரேமாவுக்கு ஜடை முதலியன போட்டுச் சிங்காரம் செய்ய வந்து விட்டார்கள்.

---

மகிமையுள்ளது; அடிமை கொண்டவர்களின் அனுஷ்டானத்தைத் தான் கைப்பற்றுதல் கவுரவம் என்று துணிந்து ஒரு சபையில் வெட்கமின்றிப் பேச வருகிறவர்களெல்லாம் பட்டதாரிகளாம். என்னே வெட்கக்கேடு!

மேளமும் தாளமும் அமர்க்களப் படுகின்றன. மணவறையில் குருட்டுக் கிட்டு வெகு ஷோக்காகவும், ஆடம்பரமான அலங்காரத் துடனும் பித்துக் கொள்ளிபோல விழித்து நாற்புறமும் பார்த்த வண்ணம் கோண வாயையும், கோண மூக்கையும் ஆட்டியும் அசட் டுச் சிரிப்பு சிரித்தும் கோணங்கியாக உட்கார்ந்திருக்கிறான்.

அழுது அழுது முகம் வீங்கிப் போய் கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்து இன்னும் தண்ணீர் வடிந்துகொண்டே இருக் கும் ப்ரேமாமணியை இழவுக்கு இழுப்பதுபோல இரண்டு மூன்று அம்மாமார்கள் இழுத்துக்கொண்டு வந்து மணையில் உட்கார வைத் தார்கள். ப்ரேமா விம்மி விம்மி யழும் விம்மல் அவள் தேகத்தை அப்படியே ஆட்டித் தூக்கித் தூக்கிப்போட்டுக் குலுக்குகிறது. குனிந்த தலையை நிமிரவே இல்லை. கண்ணீரோ கீழே பொட்டு பொட்டாகச் சொட்டிப் பெருகுகின்றது. அங்குக்கூடி இருப்பவர் களோ, அவர்களின் மனம் போனபடியே பேசிக் கொண்டிருக்கி றார்கள். பாகீரதியின் சந்தோஷமோ கரை புரண்டுவிட்டது.

நாகராஜனின் கல்யாணம் நிச்சயமானதற்குப் பிறகு அவ னுடைய சகோதரியாகிய நாகம்மாளுக்குத் திடீரென்று நல்ல வரன் கிடைத்து விவாகம் நிச்சயமாகிவிட்டதால் இரு தரத்து சம்மந்திக ளும் ஜன சமுத்திரம்போலக் குழுமிவிட்டார்கள். எல்லோரும் ஏராளமான செல்வவந்தர்கள். பெரிய அரண்மனைக்கு ஒப்பான இவ்விடத்திலேயே இரண்டு கல்யாணப் பந்தல்களும் வெகு விசித் திரமாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. ப்ரேமாமணிக்கும் குருட்டுக் கிட்டுவுக்கும் அலங்கார மண்டபந்தான் ஒன்று மிச்சமா! அம்மன் கோயிலில் பலி கொடுக்க ஆட்டுக்கிடாவை நிறுத்தியிருப் பதுபோல ப்ரேமாமணியை துடிக்கத் துடிக்க உட்காரவைத்திருக் கும் கோராமையைக் கண்டு யார்தான் சகிப்பார்கள்?

---

தமிழ்நாட்டு கவிச் சக்ரவர்த்தியாகிய சுப்ரமண்ய பாரதியாருக்கு ஏற் பட்ட புகழ் முற்றும் அவர் ஆங்கிலத்தை நன்றாகக் கற்றதனால்தான் உண் டாகியதாம். ஆதிகாலத்துக் கம்பன், காளமேகம், காளிதாஸன், புகழேந்தி முதலிய மாபெரும் புலவர்களும், இக் காலத்தில் புலவர் பெருமானாய் விளங்

அந்த இடத்தில் ஒருவரும் நம்பக்கூடாமலும் கனவிலுங்கூட நினைக்க முடியாததுமான ஓர் மகா வியப்புறும் சம்பவம் நடந்தது. அவ் வீட்டுக் கல்யாணத்திற்கு வந்துள்ள சம்மந்தி வீட்டு கோஷ்டியார் எல்லோரும் ஒரு புறம் உட்கார்ந்திருந்தார்கள். இந்த விவாகத்திற்கு பிரேமாவும், பாகீரதியும் வந்தது முதலாக நடக்கும் சகலமான விஷயங்களையும் கவனித்துக் கொண்டிருந்த அந்த புதிய கல்யாண வீட்டுக்காரர்களும், மாப்பிள்ளையும் அடையும் ஆச்சரியமும், துக்கமும் கூறத் திறமன்று.

கல்யாண மாப்பிள்ளையின் மனத்தில் இக் கொடுமைகளைக் கண்டு சகிக்க முடியாது இருதயம் வெடித்துவிடும் போல அவ்வளவு துயரம் உண்டாகியதாய் அவன் வருந்தித் தன் தாயார், தங்கை முதலியோர்களை விடுத்து பாகீரதிக்கு புத்தி கூறச் செய்ததெல்லாம் விழலுக் கிறைத்த நீராகிவிட்டது. "பச்சைக் கிளி போன்ற இப் பெண்ணை இப் பாவி அங்கஹீனனுக்கு எவ்விதம் மனந் துணிந்து கொடுக்கிறார்கள்" என்று தத்தளிக் கிறான். என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்று வெகு அமைதிடன் பொறுத்திருந்தான். இப்போது மணையில் விம்மும் பிரேமாவைக் கண்டதும் ஆத்திரம் அவனுக்குத் தாங்க முடிய வில்லை. கண்ணில் நீர் பெருகுகின்றது. "சீச்சீ! இந்த படுபாவி பெற்ற தாயாராம். வெட்கக்கேட்டை வெளியில் கூறினால் நகைப் பார்கள்." என்று தனக்குள் ஏதேதோ எண்ணியவனாய் ஆவேசங் கொண்டவன் போல எழுந்து வந்தான். பாகீரதியின் முன்பு சென்று, யாரும் திடுக்கிட்டு வியக்கும் வண்ணம் அவள் காலில் விழுந்து, "அம்மணீ! அறிவில் பிரகஸ்பதியை வெல்லும் பாக்ய வதியே! மகா யோசனையில் தேர்ந்த தாயே! பணத்திற்கு அடிமை யாகிய புண்ணியவதியே! இந்த விதமான காரியத்தை மனந் துணிந்து செய்து, குழந்தையைப் பெற்ற பாசமும் இன்றி வருத்தி வாட்டுவதை விட தாங்கள் சற்று முன் கிணற்றில் விழுவதாகப்

---

கும் மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் முதலியவர்கள் எந்த ஆங்கிலத்தைக் கற்று மேன்மை யடைந்தார்கள் என்பதை மேற்படி பட்டதாரி மறந்துவிட்டார் பாவம். தாம் ஆங்கிலங் கற்ற வீறுப்பைக் காட்டிக் கொள்ளக் கூறிய கூற்றே இது!

பாசாங்கு செய்ததை மாற்றி, இப் பெண்ணையே தள்ளி விட்டு நீங்கள் மகிழ்ச்சி யடையலாம்.

சர்வ லோகத்திற்கும் ரக்ஷகனுக விருக்கும் கடவுள் மண்ணுலக மக்களின் குறைகளைத் தாம் மறை முகமாக நின்று மாதா வென்றும், பிதா வென்றும்,மற்ற சுற்றத்தார்,சிநேகிதர்கள் முதலியவர்களின் மூலமாக நல்லது பொல்லாததை விளக்கிக் காட்டி வருகிறார். இன்பத்தை உண்டாக்குவதும், துன்பத்தைக் களைவதுமாகச் செய்கிறார். உங்களை இக் குழந்தையின் பாதுகாப்பிற்காக அனுப்பியிருந்தும் அதன் தலையில் பாறையைப் புரட்டி வாழ்க்கையைக் குலைத்து, விடியாத வேதனையை அடையச் செய்வதையே ஓர் இன்பமாக நீங்களே செய்தால் அக் குழந்தை மற்ற யாரிடம் முறையிடுவாள்? இதோ நீங்கள் மாற்றாந் தாயாக விருந்தால் இன்னேரம் உலகம் என்ன பாடு பட்டிருக்கும்? வேறு இடத்தில் இச் சம்பவங்கள் நிகழ்ந்தால் நீங்களே எத்தனை வம்பு பேசுவீர்கள்? கடவுள் உங்களுக்குக் கொடுத்த கண்ணில்லையா? இந்த அங்கஹீனனுக்கு' கோராத்மாவுக்கு ஒரு குழந்தையைத் தள்ளி மாள வைப்பதுதான் பெற்ற தாயின் கடமையோ?

போதும்: உங்கள் பணப் பேராசையின் கொடுமைகள் போதும். இதோ இந்த 5000 ரூபாய் பணத்தை ரொக்கமாக நான் தருகிறேன். இதை வைத்துக்கொண்டு நீங்கள் சந்தோஷமாக வேறு நல்ல வரனுக்கு விவாகம் செய்து கொடுத்துச் சந்தோஷப்படுங்கள். இப்படிக் கூறும் என்னை வித்யாசமாக நினைத்துவிடாதீர்கள். நானும் ஆணுடனும், பெண்ணுடனும் பிறந்த உணர்ச்சியுள்ளவன்'' என்று கூறி வேண்டினான்.

இந்த எதிர்பாராத அதி யாச்சரியமான சம்பவத்தைக் கண்ட எல்லோரும் திகைத்துப் போய்விட்டார்கள். மணமகனுகிய சுப்பிரமணியன் அம்மட்டுடன் நில்லாமல் தனக்கு மாமியார் மாமனாக

' தலைமை வகிக்கும் யோக்யதையை முதலில் அறிந்துகொள்ள வேண்டியதையே சிலர் மறந்துவிடுகிறார்கள். கூட்டத்தில் பேசவந்தவர்கள் கூட்டத்திலுள்ள மாணவர்களுக்கும், மகா ஜனங்களுக்கும் பேச வந்திருக்கிறார்களே

ஆகப் போகும் மனிதர்களின் காலிலும் விழுந்து "ஐயன்மீர்! அம் மணீ! உங்கள் குழந்தையை சுபமாக எனக்குச் சந்தோஷத்துடன் விவாகம் செய்துகொடுக்க எண்ணியுள்ள பந்தலிலேயே அம்மன் கோயிலுக்கு ஆட்டுக்கிடா பலி கொடுப்பது போல இந்த கோராமை யான—கண்ராவியான—சற்றும் நீதியற்ற, தகாத அக்ரமக் கல்யா ணத்தையும் கொலை செய்வது போலச் செய்து அழுகையும் அனர்த் தனமுமாக இந்த காரியத்தை நடத்துவதாலா உங்களுக்கு மங்கள கரம் உண்டாகும்?

உங்கள் மனந்தான் துணிகிறதா! உங்கள் பெண்ணுயின் அப் படிக் கொடுக்க சம்மதப் படுவீர்களா? நீங்கள் பணத்திஞல் பிரபல மாகி இருப்பினும், உங்கள் பணத்திஞல் அவர்களுக்கு எள்ளத்தனே யும் உபயோகமில்லை என்ருலும் இப்படிப்பட்ட காரியத்திற்கு உடந்தையாக விருந்து கொடுமை செய்யாதிருக்கலாகாதா? இப்படி நீங்கள் ஒரே மணையில் ஒன்று மணமும். ஒன்று பிணமுமாகச் செய் வதை நான் ஆக்ஷேபிக்கிறேன். நான் விவாகம் செய்துகொள்ளத் தயாராகவில்லை. எனக்கு இப்போது விவாகம் வேண்டாம். பிறகு பார்த்துக்கொள்கிறேன். என்ஞல் இச் சங்கடத்தைச் சகிக்க முடி யாது. ஒரு பக்கம் குதூகலமும்,நகைப்பும், ஒரு பக்கம் வயிற்றெரிச் சலும், கண்ணீர் வெள்ளமும், சே! என்ன அக்ரமம்!

பணத்திஞல் தைரியமில்லை என்ருல் மனத்தில் தைரியமும் நல்ல ஆற்றலும் துணையும் வேண்டும். சுயபுத்தியே தனக்குப் பெரும் புதையல் போல எண்ணி மகிழ்ந்து செலவு செய்ய வேண்டும். இல்லா மைக்காக—வறுமைக்காக—பெற்ற தாய் தந்தையரே இவ்விதம் கொலை செய்யத் துணிவது தர்மமா? அவர்கள் புத்தி இன்மை யிஞல் செய்கிருர்கள் என்ருல் உங்களுக்குமா புத்தி மங்கி விட்டது? இந்த காரியத்தைத் தடுத்து உதவி செய்வது போக குருடனுக்கும், ஊமைக்கும் விவாகத்திற்குச் சிபார்சும் செய்கிறீர்களே! சீச்சீ!

---

யன்றி இந்த மகா பண்டிதருக்காகப் பேச வரவில்லை; பாட்டுக் கச்சேரி செய்ய வரவில்லை என்பதை உணர்ந்தல்லவா தலைமை வகிக்கவேண்டும். ஐயோ! பாவம் இனியாவது உணரட்டும்.

என்ன பாதகம் இது! இப் பெண்ணின் கண்ணீர் உங்கள் குலத்தை யன்றோ தாக்கும்.

அங்கஹீனனுக்கேற்ற ஓர் ஊமையையோ, செவிடையோ சரியான ஜோடியைப் பார்த்துச் சேர்த்து வைத்தால் இரு வகைகளுக்கும் தர்மம் உண்டு. பணத் திமிரினால் எந்த அக்ரமத்தையும் செய்து விடுவது கடவுளுக்கு ஒப்புமா!...எனக்கு விவாகம் வேண்டாம். அம்மா!...அப்பா!...எல்லோரும் எழுந்திருங்கள். அடுத்த ரயிலில் நாம் ஊர் போய்ச் சேருவோம். இந்த வீட்டிலிருக்கவும் வேண்டாம்'' என்று தன் மக்களை நோக்கிக் கூறினான்.

பிரேமாவையே நோக்கி "அம்மா! என்னை வித்யாசமாக எண்ணிவிடாதே! சந்தேகித்து நினைக்காதே! எனக்கு இவ்வாபத்து நேராமல் தடுக்க நான் இதோ உன் தாயிடம் அவள் விரும்பிய பணத்தைவிட இரட்டிப்புக்குமேலாகக் கொடுத்து விட்டேன். உன் தாயாரை நான் முன்பின்னறியேன். ஆயினும் இன்று காலையில் இங்குள்ள ஓர் பெரியவரால் சகல விஷயங்களையும் அறிந்தேன். உன் தாயாரைப்போல நீயும் சுபுத்தி யில்லாதவளல்ல. உன்னுடைய தைரியத்தை, ஆற்றலைக் கைவிடாதே. ஆற்றல்தான் உனக்கு அருந் துணையாக நிற்கும். நீ தைரியமாக உன்னையும் தாயாரையும் மாற்றிக்கொண்டால் உங்களிருவருடைய பிழைப்பிற்கும் வேண்டிய சாதகத்தை நான் செய்யத் தயாராக இருக்கிறேன்.

நான் இச் சொல்லை ஒரு வித கபடத்தை யுள்ளடக்கிக் கூற வில்லை. நான் ஓர் மானிடன். பாரத நாட்டில் பிறந்தவன். அதிலும் இரண்டெழுத்து படித்தவன். படித்த அறிவையும், மானிட ஜென்மத்தின் தத்துவத்தையும் பயன் படுத்துவதுதான் மனிதனின் கடமை என்ற ஓர் உணர்ச்சியினால் நான் என் கண் முன்பு படும் ஒவ்வொரு

---

"படாடோபமான உடையால்தான் மனிதர்களுக்கு கவுரவம்'' என்கிறார் ஒரு பெரியார். எந்த படாடோபமான உடையைக்கண்டு மகாத்மாகாந்தியை சீமையில் மகாராணி மேரியார் கைலாக்கு கொடுத்து விருந்திற்கு அழைத்துச் சென்றார் என்றதை இவர் ஏன் மறந்துவிட்டாரோ தெரிய வில்லை.

வருக்கும் என் சிறிய புத்தியைக்கொண்டு உதவி செய்து வருகி றேன். நான் ஓர் உபகார ஊழியன் என்ற ஒரு ஹோதாவின் மூலந் தான் வேலை செய்து வருகிறேன். பெண்மணீ! நீ கண்ணீர் விடாதே! கலங்காதே! எழுந்திரு.

ஐயா! குருட்டுக் கிட்டு அவர்களே! போதும் உமது துடி துடிப்பு. எழுந்திரும். வந்த வழியோடு செல்லும். பூனையாகிய உமக்கு இக் கிளி அகப்படாது. உம். எழுந்திரும்.'' என்று விரட்டி ஞன். துக்க சாகரத்தில் ஆழ்ந்துவிட்ட தனது நிலைமையில் இத் தகைய சம்பவமும் நடந்து தன் துயரம் தீருமென்று சிறிதும் எண் ணுத ப்ரேமா புள்ளிமான் போலத் துள்ளி எழுந்தாள். சுப்பிரமண் யனின் காலில் விழுந்து பலமுறை நமஸ்கரித்தாள். ஆனுல் ஆயோ மயமான நிலைமையில் ஏதும் பேச முடியாது மவுனமாகவே ஆநந்தக் கண்ணீர் பெருக நின்ருள்.

குருட்டுக் கிட்டுவோ, தனது மணிப்ரவாளமான வார்த்தையில் வழவழ கொழகொழவென்று தாறுமாறுமாகப் பேசி நொண்டிக் கையை ஆட்டி ஆட்டி,வசைமாரியைத் தூவிச் சாபமிடுகிறது. இதைப் பார்க்கும் சிறுவர்களுக்கோ சிரிப்பு அடங்கவில்லை. கல்யாண வீடே கலகலத்து கலவரமாக ஆய்விட்டது. மூலை மூலையாக பேச்சுக்கள் பலமாகிவிட்டன. தம் தம் பேச்சாகப் பேசுகிருர்கள்.

குருட்டு கிட்டு அழுதுகொண்டே "அப்பா! அப்பா! இவளெ பாழ்த்தியாப்பா!........போகழாப்பா!.........என்று பிதற்றுகிருன். அவனுடைய பிதாவும் தலை தெறிக்கக் கோபங்கொண்டு பாகீரதியை யும், தன்னை வரவழைத்தவர்களேயும் நோக்கி தடபுடலாகக் கத்தி "என்னை நஷ்டப்படுத்தியதற்கும் அவமானமுறச் செய்ததற் கும் நான் சும்மாவிடுகிறேனு பாருங்கள். கோர்ட்டில் மான நஷ்ட வழக்கு தொடுக்காமலிருக்கிறேனு பாருங்கள். இதற்காகவா என்னை

மரணமோ மகா துக்ககரமானது. கன்னெஞ்சரையும் கரைந்துருகச் செய்யும். எனினும் மரணத்திலுள்ள துக்கத்திலும் மனம் பொங்கும் ஆநந்தமு மிருக்கிறது. குடும்பத்தில் வெகு காலம் ஈடுபட்டு, பல மக்களைப் பெற்று, பல மக்களை வளர்த்து, பல பெரியாருக்குத் தொண்டு செய்து "இவளைப் போன்ற

அழைத்தீர்கள்?'' என்று வீடு இரண்டாகும்படி இறைச்சலிட்டுக் குதிக்கிறான்.

வீட்டுக்காரர் திருவேங்கடத்தானைப் பலவிதத்திலும் சமாதானம் செய்து ஓயவைத்த பாடு ப்ரம்மப்பிரயத்தன மாகிவிட்டது. வீட்டுக் கல்யாண பெண்ணோ! தன்னை அந்த மணமகன் எங்கே கல்யாணம் செய்துகொள்ளாது போய்விடுகிறானோ! என்ற கவலையுடன் உள்ளிருந்தபடியே எட்டி எட்டிப் பார்த்துத் தவிக்கிறாள்.

ப்ரேமாவுக்கோ தன் பொருட்டாகக் கல்யாண வீடே கலகலத்துவிட்டதென்று யார் யார் தன்னை வைகிறார்களோ, தன் தாயை அவமதித்துத் திட்டுகிறார்களோ! என்று மிகவும் தத்தளித்து வெட்கி நடுங்குகிறாள். இன்னும் என்ன விபரீதங்கள் நேர்ந்து விடுமோ என்று பயப்படுகிறாள். தன் தாயாரிடம் சுப்ரமணியன் பணத்தைக் கொடுத்திருப்பது இவளுக்கு மனம் புண்ணுகிறது. தைரியமாய் தன் தாயின் முன்பு சென்று வணங்கி அம்மா! "போதுமா நாம் வந்ததற்குப் பலன்? இனியாவது மரியாதையுடன் ஊருக்குச் செல்லலாம். அந்த புண்ணியவான் கொடுத்த ரூபாயை அவரிடமே திருப்பிக் கொடுத்து விடு. இந்த விஷயத்திலும் அல்பத்தனமும் பிடிவாதமும் செய்யாதே'' என்று கெஞ்சினாள்.

பாகீரதியின் நிலைமையும் விவரிக்க இயலாத கலக்க முண்டாகி விட்டது. ப்ரமை கொண்டு விழிக்கிறாள். பிரேமா தாயாரை இழுத்துக்கொண்டு சுப்ரமணியனிடத்தில் சென்று காலில்விழுந்து வணங்கி கண்ணீர் பெருக "ஐயா! பரோபகார வீரரே! தாங்கள் செய்த ஓர் மகோபகாரத்தை எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் நான் மறக்க மாட்டேன். என் வாழ்க்கையையே நிலை நாட்டிய ஒரு உதவிக்கு நான் என்ன விதமான ஈடு செய்யப்போகிறேன் என்பதை யறியாது திகைக்கிறேன். இந்த ரூபாயைத் தாங்களே வைத்துக்கொண்டு

---

நல்லவள் இல்லை. பாரபக்ஷமற்ற புனிதவதி; மகா பரிசுத்தை; உத்தமி; உழைப்பாளி; நிர்வாகி''என்கிற நல்ல கீர்த்தியை உலகம் முற்றும் சம்பாதித்து, அறுபது வயது நிறைந்த சுமங்கலியாக வாழ்ந்து உடன் பிறந்தோரும், தான் பெற்றோரும், வளர்த்தோரும், பர்த்தாவும் சகலரும் நன்றாயிருக்கையில்

எங்களுக்கு மன்னிப்பும், விடையும் கொடுக்க வேண்டுகிறேன். மூடத் தாயின் வயிற்றில் பிறந்ததன் பயன் இதுபோதும். நாங்கள் இப்போதே ஊருக்குச் செல்கிறோம். இவ்வனுதைகளின் ஞாபகமிருக்கட்டும்.'' என்று மிகவும் வணக்கமாயும், மனம் உருகியவாறும் கூறிப் பதுமை போல நின்றாள்.

சுப்ரமணியனல் ஏதும் பதிலே பேச முடியவில்லை. ப்ரேமாவின் புத்திசாலித்தனமும், சாந்தமும், வணக்கமும் அவன் மனத்தை உருக்கிவிட்டன. கண்ணீர் முட்டுகின்றது. எனினும் அவைகளை யடக்கிக்கொண்டு "அம்மா! ஏன் இப்போதே போகவேண்டுமா! கல்யாணத்திற்கு இருந்துவிட்டுச் செல்லலாகுமே! கல்யாணத்திற்காக வந்தவர்களல்லவா!'' என்று கேட்டான்.

ப்ரே.—ஆமாம். கல்யாணத்திற்குத்தான் வந்தோம். முதலிலேயே நான் இஷ்டப்படவில்லை. என் தாயாரின் தூண்டுதலால் வந்தேன். வந்த இடத்தில் வெகு அழகாக முடிந்துவிட்டது. இனி எனக்கு மிகவும் வெட்கமாகவிருக்கிறது; மனங் கூசுகிறது. ஆகையால் செல்கிறோம்.

சுப்ர.—அம்மா! இந்த பணத்தைத் தாங்களே வைத்துக் கொள்ளலாமே! எனக்கு ஈசன் ஏராளமாக அளித்திருக்கிறார். பஞ்சமில்லை. இதனல் எனக்கு யாதொரு நஷ்டமுமில்லை. இதைத் தாங்கள் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளலாம்.—என்று வினயமாகக் கூறியும், மகா மானியாகிய ப்ரேமா மறுத்துவிட்டு உத்திரவு பெற்றுக்கொண்டு தாயாருடன் அந்த நிமிடமே ப்ராயாணத்திற்குப் புறப்பட்டுவிட்டாள்.

பாகீரதிக்கு என்னவோ கல்யாணத்தை விட்டுப் போவதற்கு மனமில்லை; எனினும் தன்னைத் திட்டிய திருவேங்கடத்தானிடம் பயம் உண்டாகிவிட்டது. "வழக்கு கிழக்கு என்றானே! என்ன வந்துவிடுமோ'' என்ற பெரும் நடுக்கமுண்டாகிவிட்டதால் வாயைத்

---

ஜாம் ஜாம் என்று இம் மண்ணை விட்டு விண்ணுக்குப் புறப்படும் புண்ணியவதிகளின் — பாக்யசாலிகளின் — மரணம் துக்கத்திலும் தாமறியாத ஆநந்தக் காக்ஷியை உண்மையிலேயே அளிக்கின்றது.

திறக்காது மூட்டை கட்டிவிட்டாள். இந்த மூதேவியால்தான் கல்யாண வீட்டில் பெருங் குழப்பமேற்பட்டதென்ற வெறுப்பு எல்லோருடைய மனத்திலும் பட்டுவிட்டதால் இவளை இருந்து விட்டுப் போ என்று எவருமே சொல்லவில்லை.

ப்ரேமா முக்யமானவர்களிடம் மட்டும் கூறிவிட்டு உடனே கிளம்பிவிட்டாள். அன்று மாலை விளக்கு வைக்கும் நேரத்திற்கு தாயும் மகளும் வீட்டை யடைந்தார்கள். நாக்கைத் தீட்டி தோளில் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும் எதிர் வீட்டு எச்சிப் பாட்டி ஓடிவந்து "ஏண்டீ பாகீரதி! இதென்னடீ திடீரென்று வந்து விட்டே......என்று இழுத்தாள். பாகீரதி விஷயங்களைக் கூறினாள். அந்த விஷயத்தில் எப்படி பேசவேண்டுமோ அப்படிப் பேசி ப்ரேமாவையே திட்டினாள்.

ப்ரேமாவுக்கு மட்டும் மேல்குறித்த சம்பவத்தை மறக்கவே முடியவில்லை. இச் சிறு கிராமம் முற்றிலும் இதே ஓர் புதுமையான பேச்சாகிவிட்டது......சில நாட்களாயின.சென்றவருஷம் பாகீரதிக் குள்ள சிறிது நிலங்களிலும் சரியான விளைவு இல்லாது சாப்பாட் டுக்கே போதாமலிருந்தது. அப்போது கடனை வாங்கி கிஸ்தி கட்டி னாள். அதற்கு முன்னும் சிறிது கடன் இருந்துகொண்டே வந்தது. இவ் வருடமோ அடியோடு விளைவின்றி மணி நெல்லுக்கும் தாளம் போடும் விதியாகிவிட்டதால் ஜீவனமே எப்படியோ கஷ்டப்பட்டு நடத்துகிறார்கள்.

காரரிசியும், மட்ட அரிசியும் சாப்பிடுவதும் ஒரு வேளை பட் டினி இருப்பதும்,ஒரு வேளை கஞ்சி குடிப்பதுமாக இப்படி நடக்கும் குடும்பத்தில் அனுவசியமாகக் கல்யாணத்திற்குப் போகும்பொருட்டு பாத்திரங்களையும் விற்றுகிவிட்டது. இந்நிலைமையில், இன்னும்

---

எத்தனை தரம் கேட்டாலும் அலுக்காத கிராமபோன் ப்ளேட்டுகள் சில இருக்கின்றன. அத்தனை நன்றாக இருக்கும் ப்ளேட்டுக்கள்தான் வியாபாரமில்லையாம். விகாரமாக, பச்சைப் பச்சையாகப் பேசும் ஆபாச மான ப்ளேட்டுகள் ஆயிரக் கணக்கில் செலவாம். மக்களின் அறிவு எத்தகைய தாக விருக்கிறது?

பத்து தினத்திற்குள்ளாக கிஸ்தியைக் கட்டாவிட்டால் நிலத்தையும் ஜப்தி செய்யப்படுமென்று நோட்டீஸ் வந்துவிட்டது. பாகீரதியோ இதையே ஓர் வ்யாஜ்யமாக வைத்துக்கொண்டு "பாவி, படு பாவி. அவனைக் கல்யாணம் செய்துகொண்டிருந்தால் இதோ இச் சமயம் வாரண்டில் ஜப்தி செய்யாமல் நாம் காப்பாற்றப்படுவோமல்லவா! எல்லாம் கெட்டுப்போயிற்றே! என்ன செய்வேன்?' என்று தடபுடலாகத் திட்டுகிறாள். வீட்டிலும் சட்டி முட்டியைத் தவிர பொறுப்பு வாய்ந்த பண்டங்களுமில்லை.

மூடத்தாயின் முழுமோசத்தையும் நன்கறிந்த ப்ரேமா பதிலே பேசாது எந்த விதம் வழி செய்வதென்று யோசித்தாள். ஒன்றுமே புலப்படவில்லை. கெடு வைத்த நாளும் வந்துவிட்டது. பணம் கட்டாமையினால் வாசலில் தமுக்குத் தட்ட வந்துவிட்டார்கள். ப்ரேமாவின் மானமோ சிந்திப்போகிறது. "நம் பொருட்டல்லவோ தாயார் கஷ்டப்படுகிறாள். நாம் உயிரை விட்டுவிட்டால் இத்தகைய ஆபத்துக்கள் ஏதுமே இல்லையல்லவா! இப்பொழுது வீட்டைத் தன் வயமாக்கிக்கொண்டு நீ வெளியே போவென்றால் நாமும் தாயாரும் என்ன செய்வது? ஹா! என்னை இவ்வழியிலும் சோதிக்க வேண்டுவது மிச்சம் வைத்திருந்தாயா!'' என்று கண்கலங்கித் துவண்டு காம்பொடிந்த கொடிபோலச் சுருண்டுவிட்டாள்

---

பணக் கஷ்டம் இருந்தாலும் அதை மெல்ல சரிக்கட்டிச் சாமர்த்தியமாக நடத்திக்கொண்டு போகிறவர்களைப் பார்த்த பிறர் "இவர்களுக்கென்ன குறைவு! ஏராளமான வருமான மில்லாது இப்படி செலவு செய்ய முடியுமா?" என்கிறார்கள். சிக்கனக்காரர்களைக் கண்டாலோ, "ஐயெ பிசினரி, அல்பம், கர்மி வயிற்றுக்குத் தின்பதற்கும் மனமில்லை'' என்கிறார்கள்; இல்லையேல் தரித்திரம், மூதேவி என்று திருப்பிவிடுகிறார்கள். மக்கள் எப்படித்தான் பிழைப்பது?

## 4-வது அதிகாரம்

## தருணியின் பொறுமை—கருணையின் பெருமை

உலகத்தில் கடன்காரர்களின் உபத்திரவத்தை யறியாத மனிதர்கள் அகப்படுவது கஷ்டமே! ஆயிரத்திற்கொருவர் இருவர் இருப்பார்கள். அவர்களும் கடன்காரர்களால் தொல்லையுறவில்லை என்றாலும் கடன் கொடுத்து விட்டுத் தாங்கள் கடன்காரர்களாக அவர்களைத் துளைத்து விடும் அனுபவமே போதும். கோடிக் கணக்கான செல்வம் நிறைந்துள்ளவர்களெல்லாம் பாழும் கடன் என்கிற ஒளையில் காலை வைத்து விட்டு அதிலேயே அமுங்கி அதோகதியாகி விட்டதை நாம் எத்தனையோ இடத்தில் நிதர்சனமாகக் காண்கிறோம்.

கடன் வாங்கும்போது நமக்குத்தான் செல்வமிருக்கிறதே என்ற தைரியத்தில் இருப்புக்கு அதிகமாக வாங்கி விடவும் இருப்பு முற்றும் வட்டிக்கும், தம் செலவுக்குமே தீர்ந்து விடவும் கடன் அசல் அப்படியே ஆளை—ஏன் அவன் குடும்பத்தையே—விழுங்கி ஏப்பம் விட்டு விடுகிறது. உலகத்தில் பல்வேறு பாகத்திலும் படர்ந்து துடர்ந்து பீடித்து வரும் கொடிய தொத்து வியாதியில் இதுவும் ஒன்றாகும். பணம் உள்ளவர்களின் பாடே இத்தகைய திண்டாட்டத்திலிருக்கையில் சம்பாதிப்பதற்கு ஆளுமின்றி, சொல்ப நிலங்களை எதிர்பார்த்துக்கொண்டு 'காயுமா! பேயுமா! எந்த நிமிடம்

---

யாரைப் பற்றித் தங்களுக்கு அதிக நம்பிக்கையோ அவர்களைப் பற்றி அடிக்கடி பெருமையாகச் சிலர் பேசுகிறார்கள். அந்த நம்பிக்கையுள்ள மனிதர்களினாலேயே மோசம் போனவர்களின் காதில் இச் சொல் விழுந்ததும் தேகமே தணலாக எரிகின்றது. ஒருவருக்கு விஷமாயும், ஒருவருக்கு விருந்தாயும் இருக்கும் சுபாவத்தினரும் உலகிலிருக்கிறார்கள்.

என்ன செய்யுமோ!' என்று வானத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கும் ஏழைகள் என்ன செய்வார்கள் பாவம்!

அதிலும் சுய புத்தியும், பார யோசனையும், அநுபவமும், ஆற்றலும் அற்ற பாகீரதிக்கு இக் கதி வாய்ப்பது வெகு எளிதல்லவா! கடன் வாங்கக் கூடிய சக்திக்கு மீறி வாங்கி விட்டதன் பலனை யனுபவிக்காது எங்ஙனம் விட்டு விடமுடியும்? மகா மானியாயும், புத்திசாலியாயு மிருக்கும் ப்ரேமாமணியின் மனமோ வெட்கத்தினாலும், துக்கத்தினாலும் தத்தளிக்கிறது. தன் தந்தையை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்து மனம் புண்ணானாள். தான் ஓர் ஆண் பிள்ளையாகப் பிறந்திருந்தால் இத்தகைய கொடிய ஆபத்துக்கள் நேராம லிருக்குமல்லவா! என்று தவித்துருகுகிறாள். இனி என்ன செய்து என்ன உபயோகம் என்று பல விதத்திலும் விசனத்தில் மூழ்கினாள்.

வீதியில் தமுக்கு தட்டும் ஓசை காதில் படுவதானது கூறத் திறமற்ற வேதனையையும், திகிலையும் உண்டாக்கி ப்ரேமாவை கதி கலங்கச் செய்கிறது. இத்தனை விரைவில் இக்கதி வருவதற்குக் காரணம் குருட்டுக் கிட்டுவும், அவன் பிதாவுமே யாவர் என்பதை நம் ப்ரேமா ஒரு சிறிதும் அறியமாட்டாள். தன் மகனை மணக்க மறுத்து அவமானம் செய்து விட்டாள் என்கிற வஞ்சகத்தைக் கொண்டு இவர்கள்மீது பழிக்குப் பழி வாங்கி விடுவதே சரி என்று காரங் கொண்டு திருவேங்கடத்தான் அதற்கு எந்த முகமாக வேலை செய்யலாம் என்று யோசித்தான். இவர்களின் ஜீவிய ரகஸியத்தை முற்றும் விசாரித்து உளவறிந்து கொண்டான்.

இதையே ஒரு சாக்காகக் கொண்டு கடன்காரர்களைத் தூண்டி விட்டு வரி வசூலிக்கும் காலத்தில் இரண்டும் ஒன்றாக முட்டிக் கொள்ளும்படியாக திண்டாடச் செய்ய வேண்டுமென்று இவ்

---

குலவிளக்காய் பரிமளித்தாய்! குவலய மணியாய் விளங்கினாய். தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற பழமொழியை மெய்ப்பித்தாய். இல்லரசு இனிது புரிந்து விண்ணகம் விளங்கச் சென்றாயோ! என் தாயே! கருணை அன்னையே! நின்னுசியை என்றும் மனமுவந்து அளிப்பாயாக.

விதம் செய்து விட்டான். கடன்காரர்களுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேறு வழி இல்லை என்பது தெரிந்த விஷயம். தாயும் மகளும் என்ன செய்வார்கள் பாவம்! செய்வதென்ன தென்பதை யறியாது தவிக்கின்றார்கள்.

தங்களுக்கு இச் சமயத்தில் எப்படியாவது உபகாரம் செய்ய வேண்டும் என்று முன்பு சென்ற கல்யாண வீட்டுக்காரருக்குச் செய்தி யனுப்பி பாகீரதி வேண்டிக் கொண்டதற்கு அவர்கள் லக்ஷியமே செய்யாது தம்மால் ஏதும் முடியாதென்று கூறி விட்டார்கள். எதிர் வீட்டு எச்சிப் பாட்டியும், பக்கத்து வீட்டு பாக்கியத்தம்மாளும் இச் சமயம் ஒத்தாசை செய்ய முன் வருகிறார்களா! ப்ரமோவின் மீதே பழியைச் சுமத்தி இப் பீடை அதிர்ஷ்ட ஹீனை என்றும், பிறந்த உடனே அப்பனை உருட்டி விட்டது என்றும், தரித்திர தேவதையை நாடி சம்பத்து வலுவில் வந்ததையும் விலக்கித் தள்ளி குருட்டுக் கிட்டுவை மணக்க மறுத்து விட்டது பெருங் குற்றமென்றும் பெரியதாகத் திட்டக் கிளம்பி விட்டார்கள்.

கடனை மீட்கவும் வழி இல்லை. இனி என்ன விதம் செய்வது என்பதும் தெரியவில்லை. இதற்குள் இரண்டு மூன்று நாட்களாகி விட்டன. கடன்காரர்களே வீட்டையும் நிலத்தையும் ஏலத்தில் எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்த ஓட்டை உடைசல் முதலிய சகல சாமான்களையும் கைப்பற்றிக் கொண்டதுடன், இந்த வீட்டில் இனி இருந்தால் வாடகை கொடுக்க வேண்டும் என்றும் ஆதலால் வேறு இடம் போக வேண்டுமென்றும் கூறிவிட்டார்கள்.

அந்தோ! அச் சமயம் இப் பேதையர்களின் நிலைமையை விவரித்துக் கூற முடியுமா? தான் வீட்டில் சின்ன குழந்தையாயிருந்தபோது விளையாடிய பொம்மை முதல் சகலத்தையும் எதிரிகள் எடுத்துச் செல்வதைப் பார்க்கும்போது ப்ரேமாவின் ரத்தம் கொதிக்கின்றது.

---

பெண்களைப் பெற்று விட்ட பாவிகள் வறுமைப் பேய் வாய்ப்பட்டுத் தம் மக்களைத் தாமே விலை கூறி விற்பதேபோல பல் விழுந்து, தலை நரைத்து, தேகம் தளர்ந்து, ஸ்வாதீனமற்று உலுத்துப்போன கிழவனுக்குக் கல்யாணமென்ற சடங்குடன் கொடுப்பதைவிட கிழவனுக்கு விலைக்கு விற்றுவிட்டால்

## மங்களகரமான பன்னிரண்டாவதாண்டு விழா.
## மோகினிச் செல்வியின் அன்பர்களுக்கு
## ஒரு வேண்டுகோள்.

ஆயர் மனையிற் பிறந்து, ஆனிரை மேய்த்து, அருங்குழலூதி, ஆச்சியரோடாடிய அற்புத பொற்பாதனாகிய ஸ்ரீ எம்பெருமானின்—கருணைக் கடலின், கார்முகில் வண்ணனின்—திவ்ய க்ருபா கடாக்ஷத்தினாலும், தமிழ்த்தாயின்—கலைமகளின்—ஆசீர்வாதத்தினாலும், மோகினிச் செல்வியின்பால் அளவு கடந்த ப்ரேமையைக் கொண்ட அன்பர்களின் சிறந்த உதவியினாலும் இந்த நவம்பர் மாதத்துடன் மோகினியின் பதினொருவதாண்டு இனிது முடிவு பெற்று, டிஸம்பர் மாதத்தில் அவள் பன்னிரண்டாவதாண்டை யடையப் போகின்றாள்.

நான் எற்கெனவே சென்றவாண்டில் கோரியபடி இப்பதினொருவதாண்டில் அனேக புதிய சந்தாதாரர்கள் சேர்ந்து ஆதரிக்க முன் வந்ததற்கும், பழைய நண்பர்கள் தம்தம் சினேகிதர்களைச் சிபார்சு செய்து உதவியதற்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலையும், வந்தனத்தையும் செலுத்துகிறேன்.

தேகபோஷணைக்கு ஆகாரம் எவ்விதம் முக்கியமோ, அறிவு வளர்ச்சிக்குக் கல்வி எவ்விதம் ப்ரதானமோ, அம்மாதிரி பத்திரிகையின் அபிவிருத்திக்கு சந்தா நேயர்களின் அளவு கடந்த ஆதரவு பிரதானம் என்பது நேயர்கள் அறிந்த விஷயம். ஆதலால் தங்களுடைய பூர்ண ஆதரவை அளித்து சந்தா தொகையைச் செலுத்தி, தங்கள் பந்து மித்திரர்களையும் சேர்த்துக் கொடுத்து உதவி புரியவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன்.

அடுத்த (12-வது) இதழுடன் இச் சிறிய கதை முடிவாகிவிடுகின்றது. பன்னிரண்டாவதாண்டில் புதிய கதை வழக்கம்போல ஆரம்பிக்கப்படும். அக்கதையில் நான் நேரில் கண்டு அனுபவித்த ஜெயில் விஷயங்களை யெல்லாம் முக்கிய பாத்திரங்களுடன் விளக்கி, எழுதத் தீர்மானித்திருக்கிறேன். பொது மக்களுக்கு வேண்டிய முக்கிய விஷயங்களைப்பற்றி நாவல் ரூபமாக எழுதித் தொண்டு ஆற்றவேண்டுமென்பதே எனது நோக்கமாகையால் அங்ஙனமே அனுபவங்களை நிறைய நிரப்பி, உண்மையில் நடந்த திடுக்கிடும் சம்பவங்களும், பயங்கரச் செய்கைகளும், கனிந்த காதலின் ஸாரமும், வீரத்தின் வெற்றியும், பரோபகாரத்தின் மாண்பும் ஒன்றுகூட்டி, அவைகளைக் கற்பனையுடன் ஒழுங்குபெறச் செய்து ஒரு சீரிய துப்பறியும் நாவலாக வரைந்து மங்களபாரதி என்ற மகுடத்துடன் வெளியிடத் தீர்மானித்திருக்கிறேன். நம் மோகினிச் செல்வி மங்களகரமாய் பன்னிரண்டாம் ஆண்டு முதல் மங்களபாரதி யைத் தாங்கி, மாதந்தோறும் தவறாது உங்களை நாடி வருவாள். அவள் சீரும், சிறப்பும் அடைந்து விளங்குவதற்கு மங்களகரமாய் மகிழ்ச்சியுடன் வரவேற்று ஊக்கமும், உற்சாகமும் அளிப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

தங்களிடம் நன்றியுள்ள

வை. மு. கோதைநாயகி.

ஸ்ரீமதி

# வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

| | ரூ. | அ. | பை. | | "ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| ராதாமணி (2 பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| சாருலோசனு (2-பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| சாமளநாதன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| தியாகக்கொடி | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| ஸாரமதி | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 0 | ... | 1 | 4 | 0 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 0 | ... | 1 | 0 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 0 | ... | 1 | 0 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | ... | 0 | 14 | 0 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | ... | 0 | 14 | 0 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | ... | 0 | 12 | 0 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | 0 | ... | ... | | |
| ஜெயஸஞ்சீவி | 0 | 4 | 0 | ... | ... | | |

ரூ. 24/-முன்பண மனுப்புவோருக்கு 24 நாவல்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

ரூ. 5/-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினல் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

## "ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

துக்கமோ தாங்க மாட்டாமல் பொங்கி வருகிறது. ஆ! இந்த சிறிய மரப்பாச்சி பொம்மையும், இரயில் வண்டியும் நம் ஆருயிர்த் தந்தை அன்போடு பட்டினத்திலிருந்து வாங்கி வந்து கொடுத்ததல்லவா! இதை வைத்துக் கொண்டு நம் தந்தை நமக்கு விளையாட்டு காட்டவில்லையா!.........ஆகா!......இவை நம் தந்தையின் சிநேகிதர் ஒருவர் எனக்கு விளையாடுவதற்காகக் கொடுத்தவைகளல்லவா!...என்று ஒவ்வொன்றையும் பார்த்து மனங் கலங்கினுள். சகல சொத்தையும் அப்புறப்படுத்தி யாய்விட்டது. மகா பொறுமையோடு இருந்தாள்.

இச் சமயத்திலும் எச்சிப் பாட்டியும் பிச்சிப் பாட்டியும் ஒரு கிழவனைக் காட்டி "இவனுக்கு வாழ்க்கைப் பட்டுவிடு. இந்த கதியிலிருந்து மாறலாம். வயது 65 ஆனாலும் பாதகமில்லை" என்று துணிந்து கூற வந்தார்கள். ப்ரேமாவுக்கோ இந்த நிமிடமே இவ்விடத்தை விட்டு எங்காவது, எந்த இடத்திற்காவது கண் மறையச் சென்று தன் தாயின் துர்ச் சகாக்களைப் பிரிந்து ஜீவனத்திற்கும் வழி தேடவேண்டுமென்ற அபாரமான யோசனை தோன்றிவிட்டது.

கண்ணீர் விட்டுக் கலங்கி மனமும் கண்ணும் புண்ணுகி விட்டன. பாகீரதியை நோக்கி "அம்மா! இம்மட்டும் நம்முடைய சோதனை நிற்கவில்லை. இன்னும் என்னென்ன நடக்குமோ தெரியாது. எல்லாம் ஈசன் செயல். நாம் இனி சிரித்தவர் முன்பு இடறி விழுந்ததுபோல இவ்விடத்தி லிருக்கக் கூடாது. நாம் கடவுளை நம்பி அவர் கொடுக்கும் மதிப்படிக்கு உடனே செல்வோம். புறப்படு. இனி யோசனையும் தாமதமும் வேண்டாம்" என்று விசனத்துடனும் பணிவாயும் கூறினுள்.

இதைக் கேட்ட பாகீரதிக்கு உண்மையான நிலைமையை அறிந்து விசனிக்கும் ஆற்றலோ மனத் தாங்கலோ இல்லை எனினும் தன் மகள் குருட்டுக் கிட்டுவை மணந்திருந்தால் இக்கதி வந்திராதல்லவா! அதை மறுத்ததாலல்லவோ இக்கதி வந்தது என்று மிருகத்

---

பெண்ணின் வாழ்க்கைக்கு அழிவின்றி அடிமைபோலவாவது கிடக்கும். இக் கொடுமை இப் பாரத நாட்டை விட்டு எப்போது போகுமோ தெரியவில்லையே?

தனமான ஆவேசமும் எண்ணமுமே! மனத்தில் மிகுந்து போராடு கின்றன. அவைகளை பகிரங்கமாகக் காட்டக் கூடாமல் முணு முணுத்துத் திட்டுகிறாள். "ஆகா! வெகு கெட்டிக்காரத்தனமாக சாதித்து விட்டாய்; இப்போது எந்த விடத்திற்குப் போக தீர்மா னித்து விட்டாய். யார் உன்னை—தரித்திர தேவதையை—வெத்தி லைப் பாக்கு வைத்து அழைக்கிறார்கள். எந்த சந்தியில் சிரிக்கப் போகவேண்டுமென்கிறாய்?" என்று வெள்ளென்று நாய்போலச் சீறி விழுந்தாள்.

தாயாரின் சொல்லைக் கேட்ட ப்ரேமாவுக்கு இன்னும் தன் தாயின் உள்ளத்திலிருப்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. என்ன செய்வாள் பாவம். வெகு மரியாதையோடும் தாழ்ந்த குரலி லும் பேசத் தொடங்கி "அம்மா! உன் கருத்தை நான் ஆதிமுதல் நன்கறிந்து கொண்டிருக்கிறேன். தாயே! எனக்கொரு யோசனை தோன்றுகிறது. அதன்படிக்குச் செய்துவிட்டால் மிக நல்லது. கேவலம் பல அங்கங்களும் ஹீனமாயுள்ள ஒரு நடைப் பிணத்திற்கு என்னைக் கொடுத்து அடியோடு வாழ்க்கையைத் துறக்கும்படிக்குச் செய்து சாகுமளவும் சங்கடப்படும்படி வைக்கத் துணிந்தாயே! அதைவிட எந்த ப்ரபுவின் வீட்டிலாவது ஒரு வருடம், இரு வரு டம் என்னை அடிமையாக விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள் ளுங்கள். நான் அடிமை நீங்கும் பரியந்தம் அவர்கள் வீட்டில் ஊழியக்காரியாக விருக்கிறேன். பிறகு என் சுதந்தரத்துடன் வெளி வருவேன். எனக்கேற்ற ஒருவனை நான் விரும்பினால், அவசிய மிருந் தால் மணந்துகொள்கிறேன். இல்லையேல் கன்னியாகவே என் காலத்தைக் கடத்தி உலகத்திற்கு உழைத்து என்னுயுளை முடிக்கி றேன். இந்த விதம் செய்தால் என் ஜீவியம் பாழாகாது. என் சந்தோஷம் குறையாது, என் மனம் கரையாது; என் ஆன்மா தவிக்காது; என் நெறி பிசகாது. என் பிறவியின் பயனை இழக்

---

மக்களுக்குச் சத்ரு மாதா பிதா என்ற வாக்கை மெய்ப்பிக்கும் பெற் றோர் இக் காலத்திலும் இல்லாமலில்லை. தன் பிதாவை விட வயதில் அதிக மானவரைத் தன் கணவன் என்று கூறிக்கொள்ள அச் சிறுமியின் மனம் என்ன விதம் தத்தளிக்கும்? எப்படி வருந்தும்? வாழ்க்கை முறையில் மனைவி

காது. எல்லாவற்றிற்கும் உயிர் உண்டாகும். அம்மா! இதை இழி வாக நினைக்காதே. கடனுக்காக அரிச்சந்திரன் தன் மனைவியையும் மகனையும் காலகண்டனிடம் அடிமையாக்க வில்லையா! ஓர் சுடலை காப்போனிடம் தன்னையே தான் அடிமையாக்கிக் கொள்ளவில்லையா? இதைவிடச் சிறந்த உதாரணம் வேண்டுமா!

அம்மா! என்னைக் கல்யாணம் என்ற பந்தத்தில் அடியோடு ஒழித்துவிடாமல் இவ்வழியில் செய்வதால் மிக மிக நன்மை யுண்டாகும். இதற்கு நானே அலைந்து திரிந்து பாடு படுகிறேன்; நீ கவலைப் படாதே!'' என்று கூறித் தேற்றினள்.

எந்த நல்ல விஷயமாவது தெரிந்திருந்தாலன்றோ பாகீரதியின் மனத்தில் மேல் குறித்த வார்த்தைகள் ஏறும். பதியும். பொத்தும். என்றுமில்லை. எச்சிப் பாட்டியை எப்படிப் பிரிவது என்ற துக்கந் தான் பிரதானமாக வந்தது. பாகீரதி அதற்குமேல் பதில் ஏதுமே சொல்லவில்லை.

அன்றைய தபாலில் ஒரு கவர் கிடைத்தது. அது முதன் முதல் பிரேமாவின் கையிலகப்பட்டதால் அதை உடைத்துப் படித்தாள். அந்தோ! கண்ராவி! குருட்டுக் கிட்டுவை இப்போதும் மணம் புரிவதாயின் 5000 ரூபாய் ரொக்கங் கொடுக்க முடியும் என்றும், உடனே பதில் எழுதவேண்டு மென்றும் இருந்தது. இதைத் தன் தாயார் பார்த்தாலே அனர்த்தம் உண்டாகிவிடும் என்று எண்ணி அப்போதே கிழித் தெறிந்துவிட்டுப் பதிலே போடாதிருந்து விட்டாள்.

182970

எச்சிப் பாட்டி முதலிய சகாக்கள் பாகீரதியை "ஊரை விட்டு எதற்காகப் போகவேண்டும்? இங்கேயே சாணி பொறுக்கித் தட்டி, விறட்டி விற்றும், இலை தைத்து விற்றும் கர்ணம், மணியக்காரர் முதலிய பெரிய மனிதர்களின் வீட்டில் வேலை செய்தும் இங்கேயே காலங் கடத்தக்கூடாதா? எங்கள் வீட்டிலோ! மாட்டு கொட்டி

---

யாக இருப்பினும் கேட்கும் பிறருக்கு "என் தாதா" என் தந்தை, என்றல்லவோ கூறத் துணிவாள். ஐயோ! கொடுமையே! இப்படி கொலை செய்வதற்கொப்பான காரியத்தைச் செய்துவிட்டுக் கன்னி கழிந்து விட்டதாக சந்

விலோ இடங் கொடுக்கிறோம். உன் விதியைத் தொலை'' என்று அனுதாபத்துடன் கூற வாரம்பித்தார்கள்.

அதற்கு மட்டும் பிரேமா சற்றும் இடங்கொடுக்காமல் தடுத்து "அம்மா! என் பிதா இருந்த நாளில் பெரும் வாழ்வு வாழ்ந்த ஊரில் அவரைப் பறிகொடுத்த பின்னரும் சிறிய வாழ்வு வாழ்வதாயிற்று. அதற்கும் பஞ்சமாகிய பிச்சைக்காரப் பிழைப்பையுமா நாம் இங்கேயே நடத்திக் காட்டவேண்டும்: ஐயோ! இதற்கு நான் சற்றும் சம்மதிக்கவே மாட்டேன். இதை நீ தடுப்பாயேயானால் நான் எப்படியாவது பிராணனை விட்டுவிடுவேன். இது நிச்சயம். விளையாட்டல்ல,'' என்று பாகீரதி விடும் பாணத்தை அவளுக்கே பிரயோகித்து விட்டாள்.

அதற்குமேல் பாகீரதி வாயைத் திறக்காது புறப்பட்டுவிட்டாள். இரந்த துணிக் கந்தையைத் தவிர வேறு ஒரு துரும்புகூட கிடையாது. அவைகளைச் சுற்றிக்கொண்டு கண்ணீர் வழியக் கதறிக் கொண்டே பிரேமா புறப்பட்டாள். பாகீரதி எச்சிப் பாட்டி முதலியோரிடம் கூறிப் பிரிய மனமற்றுப் புலம்பிக்கொண்டே "எச்சிப் பாட்டி! என்னை மறந்துவிடாதீர்கள். ஞாபக மிருக்கட்டும்.'' என்று இன்னும் ஏதேதோ பேசினுள். எழவுக்கு அழுவது போல அழுது புரண்டு பின்னர் பிரிந்தார்கள் பிரேமாவின் மனது மட்டும் நிம்மதியாக விருக்குமா? துக்கம் கரை புரண்டோடியது. தன் பாலிய கால நினைவுகள் முற்றும் ஒன்றன்பின்னென்ருக வந்து பின்னும் வருத்தின.

தான் இப்போது எவ்வித மனித சகாயமும் இல்லாது எந்த விடத்திற்குச் செல்வது என்ற ஏக்கமும் கவலையும் உண்டாகி விட்டது. எனினும் தான் தன்னுல் கூடிய வரையில் கால் நடையாக நடந்து எந்த ஊரையாவது அடைந்து அங்கு ஒண்டிக் கொள்ள வழி செய்ய வேண்டும் என்ற ஒரே உறுதிகொண்டு நடக்கத்

---

தோஷப் படுகிறுர்களே! இதுவா உண்மைச் சந்தோஷம்! இதுவா கல்யாணம். இதுவா ஆநந்தம். சீச்சீ! கழுத்திலும், கரத்திலும்—ஏன் உயிருக்கே—விலங்கைப் பூட்டியதற்குத் சமமென்றே தாராளமாகக் கூறலாம்.

தொடங்கினுள். பட்டினியுங் களைப்பும் மயக்கமும் இடை இடையே பாதிக்க, அதோடு தள்ளாடித் தடமாடிக் கொண்டே சற்று உட்காருவதும், சற்று நடப்பதுமாகச் சென்று அஸ்தமனத் திற்கு ஓர் ரயில்வே ஸ்டேஷனை யடைந்தார்கள்.

ஸ்டேஷனிலிருந்தவர்களை விசாரித்ததில் பவழப்பேட்டை என்ற ஓர் பெரிய திவ்ய ஸ்தலம் அருகிலிருக்கிறது. அங்கு விசேஷ மகிமை பொருந்திய ஓர் கோவில் இருக்கிறது. அது பிரார்த்தனைக்கு உகந்த இடம். வியாதியஸ்தர்கள், வரம் கேட்போர்கள் முதலிய ஜனங்கள் தினம் நூற்றுக் கணக்கில் வந்து கொண்டே இருப் பார்கள். முன்பு இரயில் சௌகரியம் கிடையாது. இப்போது சில வருடமாக இந்த சிறிய ஸ்டேஷன் இதற்குப் போட்டிருக்கிறுர்கள். அந்த ஊரில் நிறைய செல்வவந்தர்கள் எல்லாம் இருக்கிறுர்கள்'' என்று கூறினுர்கள்.

இதைக் கேட்ட ப்ரேமாவுக்கு பவழப் பேட்டைக்கே தாம் போய்ச் சேர வேண்டுமென்று தோன்றியது. ஆகையால் அவ்வூருக் குச் செல்லும் வழியை விசாரித்துக் கொண்டு பவழப் பேட்டைக்கு நடக்க வாரம்பித்தாள். இரண்டு மூன்று மைலுக்குள் இருப்பதால் இருட்டுவதற்குச் சரியாக அந்த ஊரை யடைந்தார்கள். வெகு தூரத்திலிருந்தே கோபுர தரிசனம் ஆவதைக்கண்டு களித்த வாறே துவண்டு,இடை தளர்ந்து வதங்கிய கொடிபோல அக் கோயி லின் எதிரில் உள்ள குளத்தங் கரைக்குச் சென்று "அப்பாடா! சர்வேசா ! முத்துக் குமாரனே ! முழுமுதல் கடவுளே !'' என்று தோத்தரித்தவாறு கரையில் உட்கார்ந்தார்கள்.

அன்று பவுர்ணமி யாதலால் சந்திரன் தனது பூர்ண ஒளி யுடன் பிரகாசிக்கும் காட்சியையும்,அந்த தாமரைக் குளத்தில் ப்ரதி பிம்பிக்கும்அழகையும் காணக் காண எத்தகைய களைப்பும் போய்விடு மல்லவா! தாமரை மலர்கள் முற்றும் குவிந்து நித்திரை புரியத்

---

ஒரு காரியத்தை நினைத்தால் நினைத்த மாத்திரத்தில் செய்யாவிட்டால் குழம்பிக் குழம்பிக் காரியமே ஆகாத வழியில் முடிந்துவிடுகிறது. சட்டென்று தீர்மானிக்கும் தைரியம் இருக்கிற காரியந்தான் வெற்றி யடையும்.

தொடங்கி விட்டன. மேலும் தம் நாயகனுகிய சூரியன் மலைக் குகைக்குச் சென்றுவிட்ட பின்னர் அன்னிய புருடனுன சந்திரனைத் தாம் பார்ப்பது சரியல்ல என்று கூறுவதுபோலக் குவிந்து கண்ணுறங்கி விட்டன. எனினும் அவற்றின் பரிமளம் மட்டும் சில்லென்று வீசும் காற்றுடன் கலந்து வந்து மக்களைப் பரவசமுறச் செய்கின்றது.

அனேக ஜனங்கள் குளத்தில் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டும், ஜபம் தபம் செய்பவரும் தேங்காய், பழம்,புஷ்பம் முதலியவைகளை அலம்புவோரும் பலவிதமாக ஜனங்கள் நடமாடுகிறுர்கள். ப்ரேமாவும் குளத்தில் கை கால்களை சுத்தம் செய்து கொண்டு இரண்டு கை தண்ணீரைக் குடித்துக் களைப்புடன் குளத்துப் படிக்கட்டிலேயே படுத்து விட்டாள். மனோ வேதனையின் அலைச்சலும்,தேகக் களைப்பின் சோர்வும் ஒன்று கூடி அவளைக் கீழே தள்ளிவிட்டன. கோவிலிலிருந்து வரும் ரமணீயமான வேத கோஷத்தின் இனிமையும், மணி யடிக்கும் நாதத்தின் ஒலிப்பும், கற்பூரம் முதலிய பரிமள வஸ்துக்களின் அபரிமிதமான வாசனையும் பிரேமாவை பூரிக்கச் செய்கின்றன. மனத்திலுள்ள பலவிதமான விசனத்திலும் இவ்வாநந்தம் பெரிதாகப் பொங்கி இவளை புத்துயிர் பெறச் செய்கின்றது. களைத்துச் சோர்ந்து போயிருக்கும் இச் சமயத்தில் இச் சிலுசிலுப்பான காற்றும்,அருகிலிருக்கும் நந்தவனத்திலுள்ள புஷ்பங்கள் எல்லாம் ஒன்று கூடி கம்மென்று பரிமளம் வீசுவதும் கூடி மருந்து கொடுத்ததுபோலத் தெம்பு உண்டாயிற்று.

சில நிமிட நேரம் அக் குளக்கரையிலே படுத்திருந்தாள். பிறகு எழுந்து தன் தாயாரையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்குள் சென்றுள். என்றும் சாந்தமும் சந்தோஷமும் கண்டறியாத பாகீரதியின் முகமும் மனமும் இப்போதும் அப்படியே இருக்கின்

---

எந்த சரக்கினுல் தான் அதிக லாபம் அடையலாமென்று வியாபாரி நினைக்கிறுனே அதே சரக்கினுல் நஷ்டத்தையே, எதிர்பார்க்காம லடைந்து விடுகிறுன். எந்த சரக்கை அசட்டையாக மதித்துப் போடுகிறுனே அது சரியான லாபத்தைக் கொடுத்துவிடுகிறது. சரக்கினுல் எதுவுமில்லை, மனித

றன. வாயோ முணுமுணுத்து ஜபம் செய்கிறது. இன்னிலைமையில் கோயிலுக்குச் சென்றார்கள். அங்கு கற்பூராரத்தியும் திவ்ய தரிசனமும் ஆகிக்கொண்டிருந்தன. எல்லோரும் தம் தம் மனப்படி துதி செய்து தொழுகின்றார்கள்.

பிரேமாவும் தன் குறைகளை முறையிட்டுப் பிரார்த்தனை செய்தாள். "என் தாயாருக்கு நல்ல புத்தியைக் கொடுத்து சுய அறிவுடனும் ஆற்றலுடன் பிழைக்கக் கூடிய வழியைக் காட்ட மாட்டாயா? என்னை இதுவரையில் அல்லல் படுத்தியதோடு நிறுத்தி, இனியாவது ஒரு நிலையில் காக்க மாட்டாயா!'' என்று பிரார்த்தனை செய்து நமஸ்கரித்தாள். அங்கு ஸ்வாமியின் பிரஸாதம், பழம், சர்க்கரை முதலியன விநியோகம் கிடைத்தது.

அன்று முற்றும் பட்டினி கிடந்த இவர்களுக்கு அவ்வாகாரம் கிடைத்ததும் அவைகளைச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் குளத்திற்குச் சென்று தண்ணீர் குடித்துவிட்டு இரவு எங்கு படுத்துக்கொள்ளலாம். எங்கு காலத்தைக் கடத்தலாம் என்று யோசித்தார்கள். அன்று சுவாமி தரிசனத்திற்காக வந்திருந்த ஏராளமான கூட்டத்தினர் குழந்தைகள் உள்பட கோயில் மண்டபத்திலேயே படுத்துக் கொண்டார்கள். சிலர் பக்கத்திலுள்ள சத்திரத்தில் படுத்துக் கொண்டார்கள். பிரேமாவும் இக் கூட்டத்துடன் கலந்து படுத்துக் கொள்வதெனத் தீர்மானித்து. கூட்டத்துடன் கூட்டமாக படுத்துக்கொண்டாள்.

பிரேமாவுக்கு எத்தனை களைப்பு மேலிட்டிருந்தபோதிலும் ஒரு நாளு மறியாத புதிய கூட்டத்தையும், இடத்தையும் பார்த்து மனம் எண்ணுததும் எண்ணத் தலைப்பட்டது. தூக்கமே பிடிக்கவில்லை கண்ணைத் திறந்தபடியே பல் வேறு எண்ணங்களினால் உலுப்பப்பட்டு ஒரு புறம் பயம் நடுங்கியவளாய் இரவை யோட்டினாள்.

---

னின் அதிர்ஷ்டம் கூடும் வேளையில் உபயோக மற்றவைகளெல்லாம் பணமாகி விடும்; போதாக் காலத்தில் உபயோகமானதெல்லாம் பலிக்காது போய் விடும். இது எங்குமறிந்த ஓர் சோதனையே யாகும்.

பொழுது புலரும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணம் கிழக்கு வெளுக்கத் தொடங்கியது.

பக்ஷி யினங்களெல்லாம் இனிமையான கானம் செய்யத் துவக்கிவிட்டன. கோயில் மணி வெகு அழகாயும் மக்களின் மனத்தில் தைரியம், பக்தி, சாந்தம் முதலியவைகளைக் கொடுக்கக் கூடியதாயும், டணிங், டணிங் என்று ஒலித்தது. கோயிலில் உள்ள சில பக்தர்கள்-பண்டாரங்கள்-முதலியோர் தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலிய தோத்திரங்களை வெகு உருக்கமாயும் பக்தியோடும் பாடுகின்றார்கள்.

இந்த ஆநந்தக் காட்சிகளை காணக் காண பிரேமாவின் மனம் அபரிமிதமான பூரிப்பையும், ஆநந்தத்தையும், துல்லியமான—புனிதமான—பக்தி ரஸத்தையும் அடைந்தது. அவளாலேயே கண்டுபிடிக்க இயலாத ஓர் புதிய உணர்ச்சி அவளைச் சூழ்ந்தது. பிரேமா எழுந்து உட்கார்ந்து தனக்குத் தெரிந்த பகவத் பாடல்களைத் தானும் பாடினாள்.

வெகு ரமணீயமான அக் காலையின் குளிர்ந்த நேரத்தின் அளப்பரிய இயற்கை யன்னையின் எழிலைக் குறிப்பிட்டுக் கூற முடியுமா! மக்களெல்லோரும் தம் தம் தொழிலை மேற்கொண்டு கூட்டங் கூட்டமாகக் கிளம்பினார்கள். குளத்திற்கு அனேக பெண்கள் இடையில் குடமும், கையில் செம்புகளும், தோள் மீது துணிகளும் தாங்கிக் கொண்டு வருகிறார்கள். சிலர் நீராடிவிட்டு ஜலம் எடுத்துக்கொண்டு போகிறார்கள்.

இந்த கூட்டத்தின் குதூகலத்தைப் பார்த்த வண்ணமே பிரேமா ஒரு புறமாக நின்றிருந்தாள். பாகீரதியோ கூண்டிலடைத்துப் போட்ட மிருகத்தைப் போல தத்தளிக்கின்றாள். எந்த வகையில்

---

சகல காரியத்திற்கும் முக்ய மூலாதாரம் பணம். அந்த பணத்தினாலேயே சில சமயம் காரியம் கெட்டு விடுகின்றது. அதே பணம் எதிர் பார்க்காத காரியங்களையும் அனுகூலமாக்கி விடுகின்றது. எல்லாம் வேளையின் பலன்.

செல்லவும் முடியவில்லை. பெண்ணை திட்டுவதைத் தவிர வேறு மார்க்கம் தெரியாது விழிக்கிறாள் பாவம். பிரேமாவும் பாகீரதியும் அக் குளத்தில் ஸ்நானம் செய்து விட்டு ஸ்வாமி தரிசனத்திற்குச் சென்றார்கள். ஸ்வாமி தரிசனமும், சிறிது பழம் வினியோகமும் கிடைத்தன. அதைப் புசித்துவிட்டு அவ்வூரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள்.

கோயிலைச் சுற்றி நான்கு மாட வீதிகளும், அவைகளில் மாடிகள் நிறைந்ததும், சாதாரணமுமான அனேக வீடுகளும் வீதியின் இரு புறத்திலும் பெரிய பெரிய விருக்ஷங்களும் வெகு அழகாக அமைந்திருப்பதைப் பார்த்து பிரேமா பூரித்தாள். அக்ரகாரத்திற்கு வெளியிலும் இப்படியே சில வீடுகள் ஓட்டு வீடாயும் சில மண் சுவற்றிலான வீடுகளும், சில கூரை குடிசைகளும், சில மறைவுக்கும் நிழலுக்கும் கீத்தினால் தட்டி கட்டி மிக மிகச் சிறிய குடிசைகளும் காணப்பட்டன.

அவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே வெகு தூரம் சுற்றிக்கொண்டுவந்தார்கள். வெயிலின் வேகம் அதிகப்பட்டுக்கொண்டே போகிறது. இத்தகைய ஒதுக்குப் புறமான வெளியில் சிறிய சிறிய கூடாரம் போல ஓலையினால் வரிசையாக 50 குடிசைகளுக்கு மேல் காணப்பட்டன. அவைகளை உற்று கவனிக்கையில் ஒவ்வொரு கூடாரத்திலும் ஒரு ஆணோ, ஒரு பெண்ணோ உட்கார்ந்து மலைகளை வெட்டியகற்களை சிறிது சிறிதாக உடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

கல்லுடைக்கும் வேலையோ மகா கடினமான காரியம். அந்த காரியத்தை சற்றும் முகச் சுளிப்பின்றி குதூகலத்துடன் ஒவ்வொருவரும் தமாஷாக

மண்ணை நம்பி மரமிருக்க ஏலேலோ; ஏலசா ஐலசா!
மரத்தை நம்பி கிளை இருக்க ஏலேலோ! ஏலசா! ஐலசா!
கிளையை நம்பி தழை இருக்க ஏலேலோ!ஏலசா!ஐலசா!
தழையை நம்பி ஆடிருக்க, ஏலேலோ!ஏலசா! ஐலசா!
ஆட்டை நம்பி நாமிருக்க ஏலேலோ! ஏலசா! ஐலசா!

என்று வெகு உத்சாகமாகப் பாட்டுக்களும் பாடிக்கொண்டே, டங்கு. டங்கு. என்று உடைத்து ஒரே சரியாகக் குவிக்கின்றார்கள்,

இந்த விசித்திரமான வேலையையும் அவர்களுடைய பொறுமையையும் கண்ட பிரேமாவுக்கு கூறத் திறமற்ற போச்சரியம் உண்டாகியது.மனிதர்களுடைய சாண் வயிற்றின் பொருட்டாகஎத்தனை மார்க்கங்களை ஈசன் வகுத்திருக்கிறான்? ஆகா! எந்த ஒரு மனிதரும் தம்மைக் காத்துக்கொள்ளத் தம்மால் கூடிய உழைப்பைச் செய்து பிழைப்பதைப் போன்ற நன்மை வேறு எதுவுமே இல்லை என்ற தத்துவம் இவர்கள் வேலையின் மூலம் நன்றாகத் தெரிகின்றது. நமக்கும் இவ்விடத்திலேயே இப்படி யோர் வேலை கிடைத்துவிட்டால் மிக்க சந்தோஷமாகி விடும். நம்முடைய இந்நிலைமையில் பிறர் முகத்தில் விழிக்காமல் பிழைக்கக்கூடும். தன்னைத் தான் காத்துக் கொள்ள நீதியான சத்ய மார்க்கத்தில் எந்த வேலையை யார் செய்தால்தான் என்ன தவறுதல். ஒருபோதும் இவைகள் இழிவாக மாட்டா. உண்மையும், சத்தியமும்,மனத் தூய்மையும்,பரிசுத்தமும் எந்த இடத்திலிருக்கிறதோ அங்கு ஜெயம் கட்டாயம் உண்டாகும். இதைப்பற்றி யாரிடம் கேட்கலாம் என்று யோசித்துக்கொண்டே ஒவ்வொரு கூடாரமாகப் பார்த்து வந்தாள்.

அங்கு கல்லுடைத்துக் கொண்டிருக்கும் ஆணும்,பெண்ணும் வன தேவதையைப் போன்ற பிரேமாவையும் மூதேவியை வெல்லும் பாகீரதியையும் பார்த்து திகைத்தார்கள். அதில் சிலர் ஏனம்மா வெய்யல்லெ நின்னு பாக்கிரீங்க. எங்க விதியெ தொலச்சிகிணு நாங்க கல்லெ ஒடக்கெரோம். ஒங்களுக்கேன் தலெவிதி போங்கம்மா'' என்றார்கள்.

இதற்கு வாயைத் திறக்காமல் பிரேமா பின்னும் கொஞ்ச தூரம் சென்றாள். அங்கு ஒரு தள்ளாத கிழவன், 75 வயதுக்குமேல் சென்ற பழுத்த கிழவன், தேகத்திலுள்ள சதை எல்லாம் தொங்கிப் போய் ஆடுகிறது. அவனுடைய பலவீனத்தை அவனைப் பார்க்கும் போதே அறியும்படியாக விருக்கிறது. இந்நிலைமையில் அவன் மெல்ல அங்குள்ள கல்லை உடைக்கிறான். சூ...அப்பாடா...என்று இடை இடையே பெரிய மூச்சு வருகிறது. வெயர்வை யொழுகுகிறது. இவைகளை எல்லாம் பார்த்த ப்ரேமாவின் மன முருகிவிட்டது. அவளை யறியாது கண்களில் நீர்த் துளிகள் வந்விதுட்டன.

ஆகா ! என்ன பரிதாபம்! என்ன கோரமான காட்சி! சிச்சி! ஈச்வரனின் சோதனை இத்தகைய கடினமானதாக விருக்கிறதே! இப்பொழும் சாண் வயிற்றிற்கன்றோ இந்த பாடு படுவது. உதர போஷணார்த்தம் மக்கள் உலகில் எத்தனை விதமான கஷ்டங்களை யடைகிறார்கள் என்பதைப் பார்த்தாலல்லவோ தெரிகிறது. கால் வயிறு கூழுக்கு வகை இருப்பவர்களுக்குக் கூட இத்தகையவர்க ளின் வருத்தம் தெரிவதில்லை என்பதை என் அனுபவத்திலேயே நானே கண்டிருக்கையில் அரை வயிறு முழு வயிறு, சாப்பிடுபவர்க ளுக்கு இக் கோராமை எங்ஙனம் தெரியும்?

புளி ஏப்பக்காரனின் திமிரில் பசி ஏப்பக்காரர்களின் நிலைமை யைச் சொப்பனத்தி லறிவதற்குக் கூட முடியாதன்றோ? அவர்களின் முக்கால போஜனமும் பண்டு பலகாராதி வகைகளும் வயிறு நிறைந் திருக்கையில் பசியின் கொடுமையை எங்ஙனம் ஊகிப்பதற்குத் தான் முடியும்? வயிறு அரை நிமிடமாவது காலியாக விருந்தா லல்லவோ அதன் அனுபவம் இத்தகையது, அதன் உணர்ச்சி இம் மாதிரியானது என்பது தெரியவரும். தலையணைக்குப் பஞ்சு திணிப் பதுபோல வயிற்றுக்கு ஆகாரத்தைத் திணிப்பவர்களுக்கு மற்றய நிலைமை தெரியவே தெரியாது. அப்படி தெரிகிறவர்களும் இதைப் பற்றி சற்றும் கவனிக்காமல் தம் போக்காக, தம்முடைய குஷியில் சுய நலத்துடன் இருப்பதுதான் கவுரவம், பெருமை, புண்ணி யம் என்று இருந்துவிடுகிறார்கள்.

உம்...என்ன பயித்தியக்காரத்தனம்! அவரவர்களின் கர்மாவை அவரவர்கள் அனுபவிப்பதை மறந்து வீணே நடவாத காரியத்தைக் கூறியும், எண்ணியும் பயன் என்ன! உலகம் பலவிதம் விதியை வென்றவர் யார் உளர்? ஐயோ, பாவம்! இக் கிழவரின் பரிதாபம் என்னைக் கலக்குகிறது.'' என்று தனக்குள் பலவிதமாக எண்ணிக் கொண்டு தடதடவென்று வெகு தைரியமாயும், கருணையுடனும் கிழவரின் அருகில் சென்றாள்.

தன் விதியை எண்ணி மனங் கலங்கிக் கொண்டே கண்ணீர் வடித்தவாறு கல்லுடைக்கும் கிழவர் தலையை நிமிர்ந்துகூடப் பார்க்க

யில்லை. ஒவ்வொரு உடைப்பிற்கும் 'அப்பாடா!...ஆ...ச்ச்சூ... ஈசா! உனக்கு இன்னும் மனம் இளகவில்லையா! இப் பாவியின்மீது சிறிது கிருபை செய்யலாகாதா!' என்றது போன்ற சொற்களும் பகவன்னாமங்களும் வந்து கொண்டே இருக்கின்றன. இந்நிலைமை யில் ப்ரேமா கிழவர் முகத்துக்குச் சமீபத்தில் குனிந்து வெகு வணக்கமாயும்,பக்ஷத்துடனும் அன்பொழுக "தாதா! தாதா! இதோ இப்படிப் பாருங்கள். இக் கல்லை நான் உடைக்கிறேன். தாங்கள் அதை இப்படிக் கொடுங்கள்'' என்று கேட்டாள்.

இவ்வுலகிலிருந்தும்,இவ்வுலகத்தையே மறந்து தன் போக்காக வேலை செய்து கொண்டிருக்கும் கிழவருடைய செவியில் இக் குரல் கேட்டதும் மிக்க வியப்பும்,திகைப்பும் அடைந்து தலையை நிமிர்ந்து பார்த்தார். வன தேவதையோ, ரதி தேவியோ என்று ஐயுறும்படி யான எழிலாரணங்கு இரு கைகளையும் நீட்டியபடியே கருணையும் விசாலமான புத்தியின் ஒளியும் ப்ரகாசிக்கும் கண்களுடன் கூடிய பார்வையோடு நிற்கும் வனிதா ரத்தினத்தைக் கண்டதும் தன் கண் களையே நம்பவில்லை. கண்களை நன்றாகப் பிசைந்து கொண்டு பார்க் கையில் இது கனவல்ல; நினைவே என்றதை உணர்ந்தார்.

மெல்லிய நடுங்கும் குரலால் "அம்மணீ! நீ யாரம்மா! இந்த துரதிருஷ்டக்காரக் கிழவனோடு பேசவேண்டுமென்று வந்ததை நோக்க எனக்கு வியப்பின்மேல் வியப்பாக விருக்கிறதே! பால் வடி யும் இளம் பருவத்து செல்வீ! நீ யாரம்மா!'' என்று கேட்டார்.

ப்ரேமா:—(மிக்க இளகிய மனத்தோடு) "தாதா! நான் உங்கள் பேத்தி என்றுதான் வைத்துக் கொள்ளுங்கள். நானும் ஓர் துரதிருஷ்ட தேவதையின் கொடிய ஆட்சியில் அகப்பட்டு உழ லும் மகா பாவிதான். கடவுள் சிருஷ்டியில் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அளவில் மக்களெல்லோரும் ஒன்றேயன்றி காலக்கிரமத்தின் போக்கில்—அவரவர்களின் விதியின் கூத்தில்—ஒருவர் மாடி வீட்டில் வயிறார புசித்து மதோன்மத்தாக வளரவும், மற்றொருவர் அதே மானிட இனத்தில் பிறந்தும் 'காடு வாவா! வீடு போபோ!' என்கிற நாளில் இப்படி வெய்யிலில் கல்லுடைக்கவும்

இருக்கிறது. எல்லாம் இப் பாழும் வயிற்றிற்கன்றே! தாதா! நீங்கள் வீணே பேச்சில் பொழுதைக் கடத்த வேண்டாம். இந்த சுத்தியை இப்படிக் கொடுங்கள். தங்களைப் பார்க்க என் மனம் சகிக்கவில்லை.

கிழவர்:—ஆகா! பெண்ணரசே! இக் கலிகாலத்தில் கூட உன்னைப்போன்ற ஒரு குணவதி உலகத்திலிருக்கிறளா! இது உண்மையில் நடைபெறும் விஷயமா! அம்மா! வேண்டாம். ரோஜா புஷ்பத்தைவிட மெல்லிய மிருதுவான புஷ்பம் போன்ற நீயா இக் கொடிய கடின வேலையைச் செய்வது? வேண்டாமம்மா! நீ இம் மட்டும் சொல்லிய வார்த்தையே எனக்கு அடங்காத ஆநந்தத்தைக் கொடுக்கிறது. நீ சௌபாக்யவதியாக இருக்க வேண்டும் தாயே!—என்று கூறிக்கொண்டே மீண்டும் கல்லை உடைக்கத் தொடங்கினர்.

ப்ரேமா:—தாதா! தாங்களப்படிக் கூறலாகாது. நான் அம்மாதிரியான சுகுமார வாழ்க்கையை ஒரு போதும் பெற்றதில்லை. பெறினும் அதை நான் விரும்பவில்லை. எந்த மனிதரும் தம் தம் சக்தியான மட்டில் எத்தொழிலேனும் நன்மார்க்கத்தில் செய்தும் பிறருக்கு உதவியும் வாழ்க்கை நடத்த விரும்புகிறேன். அதுதான் எனக்குப் பிடிக்கிறது. தாங்கள் முதலில் சுத்தியை என்னிடம் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். என்னை வித்யாசமாக நினைக்க வேண்டாம்—என்று கூறிக்கொண்டே கிழவரின் கையிலிருக்கும் சுத்தியைத் தானே பிடுங்கிக் கொண்டு வேறொரு புறமாக உட்காந்து கல்லை உடைக்க வாரம்பித்து விட்டாள்.

கிழவர் எத்தனை மறுத்துக் கூறியும் பயனற்று விட்டது. கிழவருக்கிருந்த ஆயாசத்தினுல் அந்த ஒரு சாண் இடத்திலேயே அப்பாடா! என்று தன் மேல் உத்தரியத்தை விரித்துக்கொண்டு படுத்து விட்டார். ப்ரேமா கிழவர் எப்படி உடைத்தாரோ அதே போல கல்லை உடைத்துக் கொண்டே "தாதா! உங்களுடைய இந்த தள்ளாத நிலைமையில் இத்தகைய கொடிய தொழிலைச் செய்கிறீர்களே! உங்களுடைய சாண் வயிற்றிற்குக் கஞ்சி வார்க்க வேறு யாரும் கிடையாதா! தாங்கள்தான் இப்படி வேலை செய்ய வேண்டுமா!" என்று கேட்டாள்.

கிழவர்:—அம்மா! நீ யாரோ முன்பின்னறியாத குழந்தை. உனக்கு இத்தகைய இரக்கமான மனதும்,தயாளகுணமும் இருப்பது மிக மிக வியப்பின்மேல் வியப்பாக விருக்கிறது. எனக்கு மனிதர்கள் இருக்கிறார்களா வென்று கேட்கிறாய்? உம். என் விதியைக் கூற வேண்டுமா! கலக்கமற்ற உன் ஹ்ருதயத்தில் கலக்கமும்,குழப்பமும் உண்டாக்க வேண்டுமா! அம்மா! ஏதோ நான் ஓர் பிச்சைக்காரன் என்றதோடு மட்டும் நிறுத்திக் கொள்கிறேன்.

ப்ரேமா:—தாதா! உலகில் பிறந்த ஒவ்வொருவரும் கடவுளின் கீழ் பிச்சைக்காரர்கள்தான் என்பது என்னுடைய தீர்மானம். நானும் அதோ நிற்கும் என் தாயாரும் பரம ஏழைகள். முதல்தர மான பிச்சைக்காரர்கள்தான். ஆதலால் தாங்கள் சற்றும் கவலை யின்றி கூறலாம்.எங்களுக்கும் பிழைக்க வழி இன்றித்தான் இப்படி தேசாந்திரம் கிளம்பி விட்டோம். தாங்கள்தான் அதற்கும் உதவி செய்ய வேண்டும்.

கிழவர்:—அப்படியா! நீங்கள் தேசாந்திரம் புறப்பட்டவர்களா! அந்தம்மாள் உன் தாயாரா! மிக்க சந்தோஷம். உனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையா! உன் தகப்பனார் இல்லையா! உங்கள் பூர் வீகம் எது?—என்று பல கேள்விகளை அடுக்கடுக்காய் கேட்டார்.

மகா புத்திசாலியான ப்ரேமா சமயோசிதமாக ஏதோ பதில் கூறி, தன் தாயாரின் அசட்டுத்தனத்தினால் தந்தை இறந்த விஷ யத்தை மறைத்தும், விவாக விஷயத்தை மட்டும் சிறிது கூறித் தன் கதையை முடித்தாள். இதைக்கேட்ட கிழவர் மிகவும் பரிதாபப் பட்டார். அம்மா! உலகத்தில் கஷ்டப்படும் கூட்டம் அதிகமே யன்றி சுகப்படுபவர்கள் கொஞ்சந்தான். நூற்றுக்குத் தொண்ணூ றுக்குமேல் ஏழைகள். அரை வயிறு கஞ்சிக்கும்—அன்றாடும் கூழுக் கும் அலையும் ஜனங்கள் அதில் பாதி எனலாம். அக் கூட்டத்தில் நாமும் சேர்ந்தவர்களாகி விட்டோம். எனக்கு ஈசன் ஏதோ முழு வயிற்றிற்குந்தான் ஒரு காலத்தில் சாப்பாடு கொடுத்திருந்தார். ஆனால் எனது கெடுமதியின் காரணமாக அதை உடனே வாங்கிக் கொண்டு என்னைப் பஞ்சையாக்கி விட்டார்.

அம்மா! எனக்கு ஓர் அசட்டு மகனைப் பெற்றுக் கொடுத்து விட்டு என் மனைவி பரகதி யடைந்துவிட்டாள். என் போதாக் காலக் கொடுமை என்னை ஆட்டியதால் நான் புத்தி பிசகி நீதியறி யாது நடக்கத் தலைப்பட்டேன். அதாவது மறுவிவாகம் செய்து கொண்டேன்; அவளும் சில மாதத்திலேயே போய்விட்டாள். என் பணத் திமிரினால் மூன்றாந்தாரமும் மணந்தேன். சில வருடத்தில் அவளும் செலவு பெற்றுக்கொண்டாள். அப்போதும் புத்தி வரவில்லை. நான்காந் தாரம் தேடினேன். அதுவும் கைத்தவறியது. இத்தகைய பெண்கொள்ளும் வியாபாரத்திலேயே என் செல்வத்தில் பெரும்பாலும் தோற்றுவிட்டேன்.

இருப்பினும் எனக்கு மனைவியின் மோகமும் ஆசையும் விடவில்லை. இதற்குள் எனக்கு வயதும் 60க்கு மேலாகிவிட்டது. ஆனால் என்னுடைய அகம்பாவமும் திமிரும் குறையவில்லை. அப்போது எனக்குப் பெண் அகப்படாமல் திண்டாடினேன். 5000 ரூபாய் இனாம் கொடுப்பதாயும் பெரிய பெண் எனக்கு விவாகத்திற்கு வேண்டுமென்றும் பத்திரிகையில் விளம்பரம் செய்தேன்.

உடனே என் வீட்டைத் தேடிக்கொண்டு ஒருவர் தமது மனைவி, மக்கள் எல்லோரும் வந்து, தம் பெண்ணை எனக்குக் கொடுப்பதாயும் 5000 ரூபாய் ரொக்கமாகக் கையில் கொடுத்துவிடவேண்டுமென்றும் கூறினார். நான் உடனே சம்மதித்தேன். பெண்ணுக்கு 18 வயதுக்கு மேலேயே இருக்கும். அவளும் என்னை மணக்கச் சம்மதித்தாள். ஆடம்பரம் ஏதுமின்றி விவாகம் நடத்த அவள் ப்ரியப்பட்டாள். அங்ஙனமே நடந்துவிட்டது. தாலி கட்டுவதற்கு முன்பே 5000 ரூபாயை அப்பெண்ணே வாங்கி அவள் பெற்றோருக்குக் கொடுத்துவிட்டாள். பெண்ணுக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு நகைகள் போட்டேன். விவாகம் நடந்தேறியது.

அன்றிரவே பெண்ணை என்னிடம் விட்டு விட்டு அவளுடைய பெற்றோர்கள் போய்விட்டார்கள். என்னுடைய பிள்ளை என்ற பெரும் பாவி வெகு ஆத்திரமும், கோபமும் கொண்டு என்னை எதிர்த்துச் சண்டை செய்தான். "எனக்கு விவாகம் செய்யாமல் அறுபது வயது கிழவனான உனக்குக் கல்யாணமென்னடா படுபாவி!

கிழவனே!' என்று என் மண்டையிலடித்துவிட்டு, என் புது மனைவி படுத்திருந்த இடத்திற்கு ஓடி அவளை ஒரே குத்து குத்திவிட்டு "கிழக்கட்டேலே போறவனே. இனி என்ன செய்வாய்?" என்று பெருங் கூச்சலிட்டான்.

அந்தோ! பயங்கரம், பயங்கரம். என்னுடைய நிலைமை அப்போது எப்படி இருந்திருக்குமென்று கூறவேண்டுமா! என் ப்ரக்ஞையையே போய்விட்டது; எனினும் நான் பெரிதாகக் கத்திக் கூச்சலிட்டுவிட்டேனும். அப்போது வீதியில் ரோந்து போய்க் கொண்டிருந்த போலீஸ்காரன் சுவரின்மீது ஏறிக் குதித்து உள்ளே வந்துவிட்டான். அதன்பிறகு கேட்க வேண்டுமா? என்ன நிலைமையில் என் மனம் தவித்திருக்கும்? ஆ! இப்போதும் சரீரம் நடுங்குகிறது. அவ்வளவுதான் கூட்டம் நூற்றுக் கணக்கில் அந்த நிசியில் எப்படித்தான் வந்து சேர்ந்துவிட்டதோ எனக்குத் தெரியாது.

அம்மா! நீயோ சிறுமி! இத்தகைய பயங்கரங்களை யறியாத பேதை! உன் மனத்தில் இப்பாதகங்களைப் புகுத்துகிறேனே. உம். விதி விதி. ஒரே அமளியாகிவிட்டது. என்னுடைய அசட்டு மகனோ கையிலுள்ள கத்தியைக் கீழே வைக்காது நின்றதால் அதுவே பெரிய சாக்ஷியாகிவிட்டது. ஆனால் குத்தப்பட்ட என் புதிய மனைவியோ ஒரு பெரு மூச்சுக் கூட விடவில்லை. ஐயோ என்றும் கத்தவில்லை. பிணமாகிவிட்டாள்.

உடனே பெரிய போலீஸ் படைகளே என் வீட்டில் கூடிவிட்டார்கள். டாக்டர்களும் வந்து சேர்ந்தார்கள். பிரேத விசாரணையும் பரிசோதனையும் ஆரம்பித்துவிட்டார்கள். என்னுடைய உயிர் பாதியும் போய்விட்டதென்றே கூறலாம். ப்ரேத சோதனை நடக்கையில் அவள் மடியில் ஒரு கடிதச் சுருள் இருந்தது. அந்த சுருளைக் கண்ட வைத்தியர் ஆவலோடு எடுத்துப் பிரித்து தனக்குள் ஒருதரம் படித்துவிட்டு, அத்தனை பெயர்களுக்கெதிரில் உரக்க மீண்டும் படித்தார். அந்தோ! என்ன ஆச்சரியம்! அதில்

"ஏய் நரைத்த கிழமே! ஆசைப் பேய் கொண்ட கிழமே! பெண்ணாசை வயப்பட்ட பெரு மூடமே! உங்களைப்போ

லொத்த மதியீனர்கள் உலகத்தில் நிறைந்திருப்பதினால்தான் என்னைப்போன்ற எத்தனையோ பெண்களின் வாழ்க்கை பாழாகி உயிருடன் சவமாகிறார்கள். பெண்களைப் பெற்ற பாவிகளும் தம்மனம் துணிந்து மக்களைக் கிணற்றில், குளத்தில் தள்ளுவதற்குப் பதிலாகப் பணப்பேய்கொண்ட கிழவர்களிடம் தள்ளித் தமது வருமானத்தில் சந்தோஷமடைந்து பொங்குகிறார்கள். மக்களுக்குச் சத்ரு மாதா பிதா என்பதை நிரூபிக்க இதுவே போதுமானது. உங்களைப்போன்ற ஆசைப் பேய்களின் வஞ்சனை வலையில் பட்டு எத்தனை பெண்கள் என்னைப் போல இறக்கத் துணிந்தார்களோ! எத்தனை பெண்கள் மனம் வெறுத்து சன்யாசினிகளானார்களோ! எத்தனை பேர்கள் மனங் கெட்டு கள்ளக் காதலரிடம் சென்று கற்பிழந்தார்களோ! எத்தனை பேர்கள் கொலை முதலிய தீய காரியத்தில் இறங்கிப் பாழானார்களோ! அந்தோ! பயங்கரம், பயங்கரம்! இத்தகைய கெடுதிகள் முற்றும் சம்பவிக்கக் காரணம் எது? உங்களைப் போன்ற கிழவர்களின் காம வெறியும் பணத்திமிரும் அகம் பாவமுமே காரணம் என்பதை இனியாவது உணருவீர்களா!

ஐயோ! நினைத்தாலும் வெட்கமாயிருக்கிறதே! ஐந்தாம் விவாகமா! சிச்சி! இதை விட—இப்படி மணந்து ஒரு பெண்ணைக் கொலை செய்வதை விட—நீங்களே கிணற்றிலோ, குளத்திலோ விழுந்து இறந்திருக்கலாமே! உங்களுடைய ப்ராணன் கனி போன்று இனிப்பதுபோல இளம் பருவமுடைய எங்களுடைய வாழ்க்கையும் உயிரும் இனிக்காதா! நாங்கள் உலகத்தில் ஒரு சுகத்தையும் அனுபவிக்காமல் நரைத்த கிழ நாற்றத்தைச் சகிக்கவா பிறந்தோம். ஏ கிழமே! ஐந்தாம் தாரமாக என்னைத்தான் என் பெற்றோர்கள் கொடுத்தார்கள். நான் இதோ செலவு பெற்றுக்கொள்கிறேன். உன்னுடைய பேராசையினால் ஆறாவது விவாகம் செய்து அவளையும் தீராத வேதனையில் மூழ்க வைக்காதே! என்னோடு உன் விவாக அத்யாயத்தை முடித்து விடு. பெண்ணைப் பெற்ற பாவிகளும் இனி இம்மாதிரி கிணற்றில் தள்ளாது உண்மைக் கிணற்றிலேயே தள்ளிவிடுவது மேல். இல்லையேல் சரியான வகையில் காப்பாற்றட்டும். என்

பெற்ருேர் விரும்பிய பணத்தை யடைந்துவிட்டார்கள். இனி யாவது புத்தி வருமோ, வராதோ? ஈசன் இருக்கிருன்.

நான் இக் கல்யாண கோலத்துடன் சவமாகக் கிடக்கை யில் எப்படியும் சோதனை நடக்கும். அக்காலத்தில் இக்கடிதம் பகிரங்கமாகக் கூடும் என்ற நோக்கத்துடன் இதை மடியில் வைத்துக்கொள்ளப்போகிறேன். கிழவரே! இனியாவது புத்தி யுடன் பிழையும்.

இங்ஙனம்
சுந்தரி."

என்று வரைந்திருந்ததம்மா! இதை அந்த பெரிய வைத்தி யரே படித்து என் பவிஷை ஆத்திவிட்டார். வந்த ஜனங்கள் முற் றும் என் முகத்தில் காரி உமிழ்ந்தார்கள். கையை நொருக்கி சாப மிட்டார்கள். சிலர் என் முதுகிலிருந்த தூசியைத் தட்டிவிட்டதாக இப்பொழுது ஞாபகமிருக்கிறது. என்னிலமையே என்னைக் கைகொட்டிச் சிரிப்பதுபோல விருந்தது. "இந்த பெண்ணின் கொலைக்கு நானல்லவா காரணமாகிவிட்டேன். நானன்ருே கொலை பாதகன்." என்கிற ஓர் பெரும் எண்ணமும், பயங்கரமும் என் மனத்தில் ஆழமாக ஊன்றிவிட்டன.

அதற்குமேல் என்ன செய்யக்கூடும்? போலீஸார் விசார ணைகள் எல்லாம் முடிந்தன. வேணுமென்று ஆத்திரத்துடன் என் மகன் கொலை செய்ய வந்தது உண்மையாயினும் அது ஏற்கெனவே இறந்த சவமாகவிருந்ததால் ஒருவாருயிற்று. சாதாரண மனுஷியாக இருப்பின் இறந்திருப்பது திண்ணமல்லவா! அதற்காக ஆத்திரங் கொண்டதற்கு உள்ள தண்டனையை அவன் அடைந்தான். அம் மட்டும்என் பிறவிக்குப் போதாதா! இன்றளவும் நான் கொலைப் பாதகன்தான். என்னுல்தான் அச் சிறு மங்கை தன்னுயிர் துறந்தாள். என்ற உணர்ச்சி என்னைத் தாக்காமலில்லை.

அம்மணீ! சில வருடம் தண்டனை யடைந்து சிறைச் சாலைக் குச் சென்ற அசட்டு மகன் விடுதலையாகி வந்தான். ஆனல் அவனுக்கு முன்னையைவிட அதிகமான மூடத்தனமும், முரட்டுத்தனமும்

சிறிது பயித்தியங்கூட பிடித்துவிட்டன. சதா என்னிடத்தில் சண்டையும் பூசலுமாக தினந்தோறும் யுத்தமாகவே இருந்தது. பணமெல்லாம் கரைந்துவிட்டது. அவனுக்கு விவாகம் செய்யவில்லை என்ற மனஸ்தாபம் அதிகரித்தது. இத்தனை அனுபவப் பட்ட பிறகுமா நான் புத்தி பிசகுவேன்? என் மகனின் நிலைமையைத் தெரிந்தபிறகுங்கூட அவனுக்கு ஒரு பெண்ணை நான் மனந்துணிந்து எவ்வாறு விவாகம் செய்து அதன் வாழ்நாளைப் பாழாக்குவேன்? இதற்கு நான் மறுத்தேன்.

இந்த க்ஷாத்திரத்தினால் பையன் எங்கேயோ ஓடிவிட்டான், தேடாத இடமெல்லாந் தேடினேன். எங்கும் கிடைக்கவில்லை. தலைவிதியே என்று நான் நொந்து அனாதையாகி திக்கற்றுவிட்டேன். என் பணத்தை நானே முக்கால் பங்கையும் ஒழித்தேன். என் மகன் மிகுதியைத் துலைத்துவிட்டான். அதுமுதல் நானும் மனம் முறிந்து என் விதியை எண்ணித் தேசாந்திரியாகத் திரியத் தொடங்கினேன். எனக்கு பைசாகூட கையிலில்லை.

இனாமாகச் சாப்பாடு கிடைக்கும் சத்திரங்களுக்குச் சென்று சாப்பிட்டால் எல்லோரும் "தடியனே! வேலை செய்து பிழைப்பதற்கென்ன? தினம் தண்ட பிண்டத்திற்கு வருகிறாயா?" என்று திட்டவாரம்பித்து எனக்கு நல்ல பாடமும் புத்தியும் கற்பித்துக் கொடுத்தார்கள். அன்றுமுதல் கடினமான எந்த வேலையாவது செய்து கூலி கிடைத்தால் உண்பது. இல்லையேல் அன்று பட்டினியாகக் கிடப்பது என்ற ஓர் உறுதி வைராக்யம் எடுத்துக்கொண்டேன். அதுமுதல் எந்த கூலி வேலைகள் கிடைத்தாலும் செய்து என் வயிற்றைக் கழுவி வருகிறேன். தற்போது இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் இந்த வேலை கிடைத்திருக்கிறது. போதுமா என் வாழ்க்கை—என் ஜீவியம்—என்று கூறிக் கண்ணீர் விட்டார்.

இதைக் கேட்ட ப்ரேமாவுக்கும் மனந் தாங்காது விசனம் உண்டாகி விட்டது. "ஆகா! எந்த காரியத்திலும் குட்டுப் பட்டு புத்தி வருவது உலகத்திலிருக்கிறது. இம்மாதிரி என் தாயாரின் புத்தி திருந்தக் கூடாதா! என் பிதாவை பலி கொடுத்தும் புத்தி

திரும்பாத ஜடமும் உலகில் இருக்கிறதே! உம். இது அவரவர் செய்யும் பாப புண்ணியத்தின் பலன்.'' என்று தனக்குள் எண்ணியபடி கிழவரை நோக்கி "தாதா! தூரத்து மலை பசப்பு'' என்ற வாக்கியம் மிக மிக உண்மை. ஏனெனில் அவரவர்களின் துயரத்திற்கு மிஞ்சியது உலகில் மற்ற எவருக்கும் இருக்காது என்று நினைக்கிறார்கள். அருகில் சென்று விசாரித்துப் பார்த்தால் இதற்கு மேல்பட்டதும் உலகில் இருக்கிறது என்பது தெரிகிறது. மகா பாவியாகிய என் சரிதையைப்போல பரிதாபம் உலகில் இருக்குமா என்று நினைத்தேன். இப்போதுதான் தெரிகிறது.

தாதா! விசனப்படாதீர்கள். உலகத்தில் பிறந்த எந்த மனிதரும் "சுகத்திற்கும் துக்கத்திற்கும் நான் ஓர் பங்குதாரி. அதைப் பகிர்ந்து கொள்ள மண்ணுலகத்திற்குச் செல்கிறேன்'' என்று கூறி விட்டே வருகிறோம்: பாவத்தை அதிகமாக மக்கள் செய்கிறோமேயன்றி புண்ணியம் செய்பவர்கள் கொஞ்சந்தான். ஏனெனில் உலக மயக்கங்களில் அதிகமான ஆசையை எந்த விதத்தில் கொண்டாலும் அது பாபத்திற்கே வழிகாட்டி யாகிவிடுகிறது என்பதுதான் என்னுடைய இச் சிறு வயதில் நான் நேரில் கண்ட அனுபவமாயிருக்கிறது. கேவலமான அனித்ய போகங்களை விரும்பி தன் சுய புத்தி கெட்டு அந்த சுகத்தையே—அதிகாரத்தையே—அடைய முயற்சிக்கையில் எத்தனை பாதகங்களைத் தாமறியாமலேயே செய்ய நேருகிறது. ஏன்—தனக்கு மிகவும் உரிமையுள்ள தெய்வம் போன்ற மனிதர்களையே தன் மூட புத்தியினால், தன் கையினாலேயே கொலை செய்யவும் நேருகின்றது.

ஹா! அந்தோ! என்ன பயங்கரமான செய்கை! இதை எண்ணினாலேயே மனம் தத்தளிக்கின்றது. ஒரு மூட எண்ணத்தின், ஆசையின் பலன் இவ்வாறு முடிந்துவிட்ட பின்னர் அவர்களின் கதி எதற்கும் உபயோகமற்ற கடைய புழுவுக்குச் சமதையாகி விடுகிறது. பின்னர் நினைப்பதென்ன? ஐயோ! முந்தி இருந்த இன்பமும் சந்தோஷமும் நீங்கிவிட்டதே'' என்று தவிப்பதுதான் மிஞ்சுகிறது. ஆனால் அதைக்கூட உணராத சில மனிதர்களும் உலகத்திலிருக்கிறார்கள்.'' என்று ப்ரேமா கூறிக்கொண்டே வருகையில் தன்

னைத்தான் சுட்டிக் காட்டி பேசுகிறாள் என்று பாகீரதிக்கு பொத்து கிறது. ப்ரேமாவின்மீது அளவு கடந்த கோபம் வருகிறது. ஆனால் முன்போல இப்போது எச்சிப் பாட்டியின் நிகரற்ற துணை எதிரில் இல்லாமையினாலும், தனது கதி கேவலம் பஞ்சையாகி விட்டதாலும் முன்போன்ற அசட்டு தைரியத்தைக் காட்டி ஆட்டம் ஆட முடியவில்லை. தவிக்கிறாள் பாவம்.

இதே வார்த்தைகள் கிழவரின் மனத்திலும், தன்னைத்தான் குத்திக் காட்டுகிறாள் என்று தோன்றச் செய்தன. அவர் இன்னும் அதிகரித்த விசனத்தை யடைந்தர். எனினும் கிழவர் இத்தனை சிறு வயதினளான ப்ரேமாவின் விசாலமான புத்திக்கும், அபாரமான அறிவுக்கும் வியந்து மகிழ்ந்தார். கண்ணிலோ நீர் பெருகுகின்றது. ப்ரேமாவின் முதுகில் தட்டிக்கொடுத்து "பெண்மணீ! உன்னுடைய அபாரமான அறிவுக்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இத்தனை வயதான பிறகு எனக்கு நான் குட்டுப்பட்ட அனுபவத்தினால் புத்தி வந்ததே யன்றி உன்னைப்போன்ற இளம்பிராயத்தில் என்னறிவு மங்கி பாழாகி விட்டதே!...அம்மா! இந்த கல்லு நீ உடைத்தது போதும். இப்படிக் கொடு. என் தொழிலைச் செய்கிறேன். அதோ அதிகார கவசம் பூண்ட மேஸ்திரி வருகிறான். இப்படிக் கொடுத்து விடு." என்றார்.

பிரேமா கொடுக்க மறுத்துத் தானே உடைத்தபடியே "தாதா! நீங்கள் அயர்ச்சியுற்றிருப்பதை நானறிவேன். இப்படியே படுத்துக் கொண்டிருங்கள். அவன் வந்தால் வரட்டுமே. தலையையா வாங்கிவிடுவான்? தாதா! அவனும் நம்மைப் போன்ற மனிதன்தான்! பயப்பட வேண்டாம். நான் பதில் சொல்லிக்கொள்கிறேன்." என்று வெகு தைரியமாகக் கூறினாள்.

ஒரு நாளும் கல்லுடைத்தறியாத பொற்கொடி போன்ற பிரேமாமணிக்கு இது தனது ஆர்வத்தினால் செய்யும் வேலையே யன்றி அனுபவ மில்லாமையால் மூச்சு திணறுகிறது. வெயர்வைத் துளிகள் முத்து கோர்த்ததுபோல முகத்தை யலங்கரித்து விளையாடி ஒன்றோடொன்று கட்டிப் புரண்டு கீழே விழுந்து உடைந்து

போகின்றன. கல்லே உடைக்கும்போது அதன் சிறு சிறு ஜெல்லிகள் தேகத்திலும், முகத்திலும் முள்ளு குத்துவது போல சுறீல் சுறீல் என்று தெறித்து வேதனையை உண்டாக்குகின்றன.

அம்மாதிரியான வலி யுண்டாகும் போதெல்லாம் "ஐயோ பாவம்! கிழவரின் தளர்ந்த தேகத்தில் இவை இன்னும் எத்தகைய பாதையை யளிக்குமோ! உம். இப்பாழும் சாண் வயிறன்றோ எல்லாத் துன்பத்தையும் சகிக்கும்படிச் செய்கிறது.'' என்று தனக்குள் சமாதானம் செய்தவாறு உடைத்துக்கொண்டே இருந்தாள்.

அச் சமயம் அங்கு சிறிது தூரத்தில் பெரியதோர் சத்தம் கேட்டது. அதை உற்றுக் கவனித்தாள். அக் குரல் அதிகாரமென்னும் அங்கிக்குள் மறைந்து கிடக்கும் மேஸ்திரியின் குரல் என்று தெரிந்தது "உம் உலகமே. உன்னுடைய மாயா லீலைகள் ஒன்ரு இரண்டா?'' என்று வியந்தாள்.

மேஸ்திரி:—ஏய்! பொம்ளே! என்ன ஜோக்கு பண்ரே! இத்தனை நேரமாக இவ்வளவு கல்லுதான் உடைத்தாயா? இவ்வளவு நேரம் என்ன செய்தாய்! கூலிமட்டும் ஜரூராக வந்து விழுமா? "வேலைக் கள்ளிக்குப் புள்ளே மீது சாக்கு'' என்பது போல இந்தப் பிள்ளையை வைத்துக்கொண்டு குலாவுகிருயா! இப்படிச் செய்தால் கூலி எப்படி வரும். அவரவர்களுக்குக் கொடுத்த கல் முழுதும் சாயங்காலத்திற்குள் உடைக்காதுபோனல் கூலியில் மண்ணுதான் விழும். விடு அந்த பிள்ளேயை'' என்று கூறியவாறு வெடுக்கென்று குழந்தையைப் பிடுங்கித் தள்ளினன்.

குழந்தையோ ப்ரமாதமாகக் கத்துகிறது. தாயோ தபிக்கிருள். பெற்றவளுக்கன்றோ தெரியும் பிள்ளேயின் பெருமை. இத்தகைய அதிகாரக் கட்டைகளுக்கு என்ன தெரியும். ஈவிரக்கம், பச்சாத்தாபம் என்பது சிறிதுமில்லாத தடியர்களுக்குக் குழந்தைகளின் அருமை என்ன தெரியும். தாயார் குழந்தையை விடாது தூக்கிக் கொள்ள வந்தாள். அவன் பெண்பிள்ளே என்பதையும் கவனியாது தன் கையிலிருக்கும் பிரம்பால் சுளீர் சுளீர் என்று புடைத்தான்.

அந்த பெண்பிள்ளை தன் குழந்தையின் பாதுகாப்பின் பொருட்டன்றோ இந்த கொடிய தண்டனைகளை எல்லாம் அனுபவிப்பது. அத்தகைய குழந்தையைக் கதறவிட்டு இப் பாவியினிடம் ஏன் நடுங்கவேண்டும் என்று ஆத்திரங்கொண்டு, "ஐயா! தே! சும்மா இரு. ஜாஸ்தி அதிகாரம் காட்டாதே! அனியாயயமா பூடுவே. நாசமாப் பூடுவே! புள்ளே குட்டி பெறுத கொட்டு மலடான உனக்கு என்ன அருமெ தெரியும்? சீ தூர போ! ஒனக்குத்தான் மேஸ்திரி பட்டம் வந்திடுச்சாங் காட்டியுமுண்ணு ஆட்டம் ஆடரயே: சத்தெ மொள்ள ஆடு. கடவுளுக்கிட்டெ இந்த ஆட்டம் பலிக்காது. அவருக்கிட்டெ நீ செருப்படி வாங்குவே: பொண் பாவம் வீண் போவாது. நீயும் ஆதியிலே எங்களாட்டும் கல்லு ஒடச்ச கயிதெதாங்ரத்தெ மறக்காதே; போய்யா! அதிகாரிங்களே காக்கா புடிச்சி இந்த பதவி வந்திடுச்செ இந்த பொவிசு தெரியாதோ! போய்யா! போ!'' என்று வயிறெரிந்து கூறினாள்.

அந்த மேஸ்திரி பின்னும் ஆத்திரங் கொண்டதால் பலத்த சண்டையும், பூசையுமாக ஆய்விட்டது. அல்பனுக்கு அதிகாரம் வந்தால் அகங்காரக் கொடி கட்டிப் பறக்கும் என்பது மெய்யாகிவிட்டது. ஒவ்வொரு தொழிலாளியையும் தடார் புடார் என்று அடித்தும், திட்டியும், மிரட்டியும் ஆரவாரம் செய்தபடியே ப்ரேமா இருக்கும் குடிசைப் பக்கம் வந்தான்.

கிழவர் படுத்திருப்பதும், ஓர் இளங் கன்னிகை கல்லுடைப்பதும் பார்த்து சீற்றங் கொண்ட மேஸ்திரி "ஏ கிழவா! என்ன ஓய்யாரமாகப் படுத்து அலுப்பாறுகிறாய்? கஞ்சி வாயில் வந்து விழும் என்கிற எண்ணமோ! இதாரு இந்த பொம்பளே! உம், எயுந்திரு.'' என்று அதட்டினான்.

இதைக் கேட்ட ப்ரேமா வெகு வணக்கத்துடன் மேஸ்திரியை நோக்கி, "ஐயா! தயவு செய்து மன்னிக்கவும். நான் இவருடைய பேத்திதான். இவர் என்னுடைய பாட்டனார். நாங்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக வெகு தூர தேசம் போய்விட்டோம். அங்கும் பிழைப்பின்றி இப்போது இங்கு வந்தோம். இத்தனை தளர்ந்த நிலைமையில்—தொண்டு கிழவராய் ஓய்ந்த நிலைமையில்—இத்தகைய

கடின வேலைகளைச் செய்ய எங்களால் கண்டு சகிக்கக்கூடவில்லை. இதுகாறும் தனக்கு திக்கில்லாமையினால் இந்த சாண் வயிற்றிற்காக இத்தகைய கஷ்டத்தை யனுபவித்தார். இனியும் அவர் இவ்விதம் கொடுமைப் படவேண்டாம். இந்த வேலையை நாங்கள் செய்கிறோம். இதோ இந்த அம்மாள் என் தாயார். இவர்களுக்கும் ஒரு வேலை யைக்கொடுங்கள். நாங்கள் இருவரும் செய்கிறோம். இனி கிழவரை மிரட்டவேண்டாம். வயது முதிர்ந்த கிழவரிடம் உங்கள் அதிகார தோரணையை சற்று காட்டவேண்டாம்.'' என்று மிகவும் பணிவாகக் கூறினள்.

தேன் ஒழுகும் வார்த்தையையும், குயிலினுமினிய குரலில் சற்றும் பயமின்றி அலக்ஷியமாகக் கூறியதையும் கண்ட மேஸ்தி ரிக்கு வியப்பு உண்டாகிவிட்டது. எனினும் அதிகார மென்னும் அங்கியைத் தரித்திருக்கும் அகம்பாவத்தினால் ஒருவிதமாக நகைத் துக்கொண்டே "ஓகோ! இந்த கெழவனுக்கு திடீரென்று பேத்தி நீ மூளைச்சயா! ஒன்னெப் பாத்தா ஒடிஞ்சி விழராப்பலெ இருக்கெ, இந்த கல்லு ஒடக்கர காரியம் ஒன்னாலே ஆவுமா! இது வெறும் வேஷம். எங்க வேலெ எல்லாம் கெட்டுப் போவதற்குத்தான் இது வழி'' என்று முடுக்காகக் கூறினன்.

ப்ரேமா:—(அலக்ஷியமாக நோக்கி) ஐயா! இதென்ன குழந் தைகள் விளையாட்டுப் பேச்சு? உமக்கு காரியம் ஆவதொன்றல்லவா முக்கியம். மனிதர்கள் யார் யார் எப்படி இருக்கிறார்கள் என்ற அவசி யம் உமக்கெதற்கு? இவ்விதமெல்லாம பேசவேண்டாம் என் தாயா ருக்கு ஒரு வேலை இருந்தால் கொடுங்கள். இல்லையேல் உங்கள் வேலையைப் பாருங்கள். கிழவர் வேலையை இனி நான்தான் செய் வேன்.'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினள்.

இதைக் கேட்ட மேஸ்திரி பதில் கூறுவதற்குள் அவனுக்கு மேற்பட்ட இன்ஸ்பெக்டர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் சற்று வயது முதிர்ந்த கிழவர். மக்களிடத்தில் இயற்கையிலேயே பச்சாத் தாப குணமுடையவர். பெரிய குடும்பி யாகையினால் சுக துக்கத்தி லும் குடும்பத்திலும் குட்டு பட்டவர். ஆகையினல் தொழிலாளி

# பன்னிரண்டாவதாண்டு

## 1934ஆு டிசம்பர் மாதத்தில் பிறக்கப் போகின்றது.

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய
மங்களபாரதி
எனும் துப்பறியும்
நாவல்
ஆரம்பமாகும்.

## — ஜகன் மோகினி —

மாதாந்த
நாவல்
சஞ்சிகை

வருஷ சந்தா ரூ. 1—8—0.
தனிப்பிரதி அணு இரண்டு.

அதற்குள் நமது சஞ்சிகைக்குப் புதிய சந்தா நேயர்களைச் சேர்த்து, முன்பண மனுப்புவோருக்கு அடியிற் கண்டபடி ஒரு வருஷ சஞ்சிகையும், மறு பக்கத்தில் கண்டபடி நாவல்களும் இனமாக அனுப்பப்படும்.

மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு

## ஒரு வருஷ சஞ்சிகை இனம்.

இப்பொழுது சந்தாதாரராக இருப்பின், அவர்களுக்கு அடுத்த ஆண்டு முழுதும் சஞ்சிகை இனமாக அனுப்பப்படும், அல்லது அவர்களுக்கு வேண்டிய நாவல் அனுப்பப்படும்.

# முற்றிலும் இனமாக நாவல்கள் வேண்டுமா?

ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பண மனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனம்

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்

பரிமளகேசவன்
உத்தமசீலன்
கதம்பமாலை
சுகந்தபுஷ்பம்

2 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனம்

3 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனம்

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
சோதனையின் கொடுமை

நவநீதகிருஷ்ணன்
சாமளநாதன்
ருக்மிணீகாந்தன்

4 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த மூன்றில் ஒன்று இனம்

5 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த ஐந்தில் ஒன்று இனம்

வைதேகி
பத்மசுந்தரன்
ராதாமணி
சாருலோசனை
காதலின் கனி

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

களின் வருத்த மறிந்தவர். அவர் வந்ததும் இங்கு நடக்கும் விஷயங்களை எல்லாம் தெரிந்துகொண்டு ப்ரேமாவை நோக்கி "அம்மா! நீ இத்தனை சிறிய வயதில் இவ்வளவு புத்திசாலியாய்—கருணையுடன் பிறர் துயரத்தை யறியும் சக்தி பெற்றிருப்பதைக் காண மிக்க சந்தோஷப் படுகிறேன். நீ விரும்புகிறபடியே இக் காரியத்தை நீ செய்யலாம். உன் தாயாருக்கும் கல்லுடைக்கும் வேலையோ, அன்றி உடைத்த கல்லை கொண்டு கொட்டும் வேலையோ தருகிறேன். எல்லோருக்குங் கொடுப்பது போலக் கூலி கொடுக்கிறேன். எது சம்மதமோ அதை ஒழுங்காகச் செய்ய வேணும்.

என்ன கிழவரே! இவ்விதம் ஒருவர் உதவிக்கு வரப்போகிறார் என்று நீர் கனவிலாவது கருதினீர்களா! எல்லாம் தெய்வச் செயல் என்பது இத்தகைய காரியத்தில்தான் நாம் அறிகிறோம். இங்கு நான் ஒவ்வொரு தரம் வரும்போதெல்லாம் உம்முடைய தள்ளாமைத்தன்மையையும், கடினமான இக் காரியத்தை பெருமூச்சு விட்டுக்கொண்டு செய்யும்போதெல்லாம் வருந்துவேன். ஆனல் நான் இதற்கு உதவி செய்யவோ, வேறு பரிகாரம் செய்யவோ என்னல் முடியுமா! நானும் பெரிய குடும்பி யாதலால் என் வருமானம் எனக்கே போதாது. நான் வாயுபசாரம் சொல்லித்தான் என்ன பயன் என்று பேசாமல் போய்விடுவேன். இன்றே எனக்கும் திருப்தியாயிற்று.'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

ப்ரேமாவின் மனங் குளிர்ந்ததைப் போல முகமும் அன்றலர்ந்த தாமரையைப் போல மலர்ந்தது. தனக்கு உழைப்பின் மூலம்—தன் கைத்தொழிலின் மூலம்—வயிற்றுக்குக் கஞ்சி கிடைத்ததை எண்ணி அபார சந்தோஷமடைந்தாள். அந்த ஊர் கோயிலிலுள்ள சுவாமியின் விசேஷத்தைக் குறித்து ஒருவர் கூறியது உண்மை என்றே நம்பி மனமார அத் தேவதையைத் தோத்திரஞ் செய்தாள். எந்த மனிதரும் தம் தம் வயிற்றிற்கு வேண்டிய கஞ்சிக்கும், மானத்தைக் காக்கவேண்டிய உடைக்கும் தம் தம் கையினல் உழைத்துச் சம்பாதித்துச்சாப்பிடுவதுதான் முக்கியம்;பெருமையும்,மனச் சந்துட்டியும் உண்டாகும். என்றது போன்ற பல எண்ணங்கள் ப்ரேமாவின் மனத்தில் கொந்தளித்தெழும் அலைகளைப் போல எழுந்தன.

இதற்கு நேர்மாருகப் பாகீரதியின் முகத்தில் எள்ளுங் கொள்ளும் பளபளவென்று வெடித்துவிடும் போன்ற கடுகடுப்பு உண்டாகிவிட்டது. "கொஞ்சமும் புத்தியின்றி கேவலமான கல்லுடைக்கும் வேலைக்கு இவள் ஒத்துக்கொண்டதுமன்னியில் நம்மையும் துழைத்துவிட்டாளே! எவனே பிச்சைக்கார கிழவனைக் கண்டு இச்

சனியன் பிடித்த பெண் ஏன் இங்கு வந்து உருகவேண்டும்?'' என்றது போன்ற தோரணையில் பலவிதமாக எண்ணமிட்டுக் கிழவனையும் ப்ரேமாவையும் விறைக்க விறைக்கப் பார்க்கிறாள்.

தாயாரின் முகத்தைக் கண்டதும் ப்ரேமா ஒரு நொடியில் சகல விஷயத்தையும் தெரிந்து கொண்டு வருந்தினாள். "வீட்டிலிருப் பின் இன்னேரம் தன் முழுத் திறமையையும் காட்டித் திட்டி விடு வாள். ஏதோ நற்காலப் பயனோ; எந்த புண்ணியமோ வாயைத் திறக்கா திருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்று சந் தோஷப் பட்டாள். பிறகு அன்று கிழவர் பாகத்திற்கு உடைக்க வேண்டிய கற்களை எல்லாம் உடைத்துத் தீரவேண்டுமென்கிற ஓர் தீரத்துடன் ஆரம்பித்தாள். சகல காரியத்தைக் காட்டிலும் கல் லுடைக்கும் வேலை எத்தனை கடினமான தென்பதை நேரில் பார்த் தவர்களுக்குத்தான் தெரியும்.

கல்லுடைப்பதையும் பார்த்தறியாத ப்ரேமாவுக்கு இது எத் தகைய கஷ்டமாக விருக்கும் என்பதைக் கூறவேண்டுமா! தேள் கொட்டுவது போலும், ஆணி முள் முதலியன சுளீர் சுளீர் என்று குத்துவது போலும் கற் துணுக்குகள் தேகத்தில் விழும் ஒவ் வொரு பாகத்திலும் சகிக்கக் கூடாத வேதனையை உண்டாக்குகின் றன. கண்ணில் விழாம லிருக்கும் பொருட்டுக் கண்ணை அரைவாசி மூடியபடியே வெகு உஷாராக உடைக்கிறாள். இருந்தும் அவ ளுடைய சுகுமாரமான புஷ்பம் போன்ற மேனி இந்த பாதையைத் தாங்காமல் நெளிந்து வளைந்து தடுமாறுகின்றது.

இதை யறிந்த கிழவரின் மனம் தபிக்கிறது. பனைமரம் போலும் கல் தூண் போலும் நிற்கும் பாகீரதியின் மனத்தில் இந்த நிலைமை ஒரு சற்றும் உறைக்க முடியவில்லை. வழக்கம்போலத் தனது விச்வரூபத்தைக் காட்டி, காளிகா தேவிபோலத் தாண்டவமாடாமல் நிற்பதே பேராச்சரியமாக விருக்கிறது. எத்தனை நேரம் அம்மாதிரி இருக்க முடியும்? பிரேமாவை வெளியில் வரும்படிச் சைகை காட் டினாள். பிரேமா தாயின் கருத்தை யறிந்து எழுந்து சென்றாள். "ஏண்டி! ப்ரேமா! உனக்கு புத்தி இருக்கிறதா இல்லையா! இந்த அந்தரமான காட்டில் கேவலம் பஞ்சைகள் நிறைந்த கூட்டத்துடன் கூடிப் பிரமாதம் செய்கிறாயே! இந்த கல்லுடைக்கும் வேலையை எனக்கும் சிபார்சு செய்ய உனக்கென்ன துணிச்சலடீ? முதலில் இதை விட்டு நீ புறப்படப் போகிறாயா இல்லையா!'' என்று ஆர்ப் பாட்டம் செய்தாள்.

ப்ரேமா இத்தனை நாட்களைப்போ லல்லாமல் வெகு தைரி

யத்துடனும், ஒரே தீரமாயும் மனத்தை உறுதி செய்துகொண்டு அம்மா! உன்னை எதிர்த்து இதுகாறும் நான் பேசியது கிடையாது. ஆனால் இனியும் அப்படி இருக்க முடியாது. உனது புத்தியற்ற தன்மையினாலேயே—உனது அவிவேகத்தினாலேயே, சத்சங்கமற்ற கொடுமையினாலேயே—என் பிதாவையும் பறி கொடுத்தாயிற்று. நமது குடும்பமே அதோகதியாகி விட்டது. நாமோ ஆள் துணை யற்ற—திக்கற்ற—பரதேசிகளாகி விட்டோம். இந்த கூட்டத்தை நீ பிச்சைக்காரக் கூட்டமென்கிறாய். நமது கதி இதிலும் கேடு கெட்டு விட்டதென்பதை மறந்து விட்டாயே! கள்ளங் கபடமற்று வஞ்சனை சூது வாதுகள் ஏதுமின்றி நிஷ்களங்கமான கூட்டமென்றுதான் நான் நினைக்கிறேன்.

இக் கிழவரின் துணை நமது நற்காலப் பயனால் கிடைத்தது என்று கூறவேண்டும். இவர் நமக்குத் துணையாக ஆவதோடு இவரே நமது பிழைப்புக்கும் வழியைக் காட்டிய மகானுபாவனாகி றார். அத்தகைய அருமையான பெரியாரைக் கடவுள் நமக்களித் திருக்கையில் நாம் இதையும் இழந்துவிட்டுச் சென்றோமானால் பெண் பிள்ளைகளாகிய நம் கதி எத்தகைய பயங்கரமான விதத்தில் முடியுமோ தெரியாது. உலகத்தில் சோதாக்களும், போக்கிரிகளும் அன்பு, இரக்கம், கருணை முதலியனவற்ற கட்டைகளும் அதிகமாக விருக்கிறார்களே யன்றி அனாதை யாயிற்றே என்று ஆதரிக்க யாரும் முன் வரமாட்டார்கள். நாம் துணையற்ற தனி வாழ்க்கை நடத் துவது ஒரு போதும் புதிய இடத்தில் ஆகாத காரியம். அதோடு பிச்சை எடுத்துத் தின்று காலத்தைக் கடத்தலாம் என்று நீ நினைத் துக் கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. அதைவிடக் கேவலமான பிழைப்பு வேறு ஒன்றுமே இல்லை எனலாம். ஈசன் நமக்கு சகல அங் கங்களையும் பழுதின்றிக் கொடுத்திருக்கையில் அவற்றைக்கொண்டு உழைத்து நாம் பிழைத்தால் அது நன்மையா, பிச்சை எடுத்தால் நன்மையா! அம்மா! வேண்டாம். எந்த மனிதருக்கும் தமது சுய உழைப்பும், ஆற்றலும் நல்ல புத்தியுந்தான் இணையிலாத துணையாகும். பெரிய தனப் புதையலைவிடப் புத்திதான் புதையல். தனப் புதையலுக்கு அனேக ஆபத்துக்கள் உண்டு. புத்திப் புதைய லுக்கு ஆபத்து மில்லை, பயமுமில்லை. நாளுக்குநாள் விருத்தியடைந்து கொண்டே மக்களை நல்ல வழியில் கடத்திச் சேன்று கரை சேர்ப்பிக் கும் துணையாகும்.

அம்மா! இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளாது நீ உன் னுடைய அருமையான மங்கள வாழ்க்கையையே பாழ்படுத்திக் கொண்டாய். இனியாவது அந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டு

நடக்க வேண்டாமா! மொண்டி, முடம், குருடு, கூனு முதலியவர் களைப்போல நாமும் இருப்பது கேவலம் பாபமாகும். ஆகையினல் நாம் தொழில் செய்து பிழைக்க வேண்டுவது கடமை. அதில் எந்த தொழில் செய்தால்தான் என்ன. இக் கடினமான வேலையையே செய்து கடவுளின் நினைவை மறக்காது இருப்போம். வேறு சுகமான வழிகள் கிடைப்பின் கடவுளையே நாம் மறந்து விடுவோம். ஆகை யினல் நாம் இத் தொழிலையே செய்து இக் கிழவருடைய துணையி லேயே நம் காலத்தைக் கடத்துவோம். இது நல்ல புண்ணிய க்ஷேத் திரமாயு மிருக்கிறது. ஸ்வாமி தரிசனமும் தினம் செய்யலாம். உனக்குக் கல்லுடைக்க சிரமமாக விருப்பின் இங்கு உடைத்து குவித்திருக்கும் கல்லைக் கொண்டு கொட்டும் வேலையைச் செய். வீண் வாதம் வேண்டாம். அப்படி உனக்குப் பிடிக்கவில்லை என்றல் உன்னிஷ்டம். நான் இதை விட்டு வரமாட்டேன் இது நிச்சயந் தான்.'' என்று கூறிவிட்டு பதிலுக்கு எதிர்பார்க்காது சென்று மீண்டும் கல்லுடைக்க வாரம்பித்து விட்டாள்.

இதற்குமேல் பாகீரதி என்ன செய்வாள். ஆத்திரமோ தலை மீறிப் பொங்குகிறது. தன்னுடைய மூடத்தனத்தினல்தான் தந்தை இறந்து விட்டாரென்று ப்ரேமா கூறும்போ தெல்லாம் மட்டும் மனத்தில் பகீரென்கிறது. ஒன்றும் பதில் பேசமாட்டாது ஒரு மரத்தடியில் விதியே என்று உட்கார்ந்து விட்டாள். பிரேமா எத்தனை சுறுசுறுப்பாகக் கல்லை உடைத்தாலும் குவியல் நிறைய சேரவில்லை. கையிலும் முகத்திலும் ரத்த காயம் பட்டு விட்டது தான் மிஞ்சியது.

பகல் பன்னிரண்டு மணிக்கு எல்லோரும் கஞ்சி குடிக்க வேலையை விட்டுச் சென்றர்கள். ப்ரேமாவும் எழுந்து கிழவரருகில் சென்று "தாதா! உங்களுக்கு ஆகாரம் எப்படி? நான் புதிதாகையி னல் கேட்கிறேன்'' என்று மிக மிக வணக்கத்துடன் கேட்டாள்.

இவ் வசனத்தைக் கேட்டு அகமகிழ்ந்த கிழவர் பிரேமாவை தடவிக் கொடுத்தபடியே "அம்மா! என் செல்வீ! நான் இன்று அடைந்துள்ள ஆநந்தத்தைக் கூறவே முடியவில்லை. எனக்கு இது காறுமிருந்த விசனங்களெல்லாம் தீர்ந்துவிட்டனபோல விருக்கிறது. நேற்று இரவு காய்ச்சிய கஞ்சியில் மிச்சமிருக்கிறது. அதோ அந்த இடத்தில்தான் எல்லோரும் கஞ்சி காய்ச்சுவதோ, குடிப்பதோ வழக்கம். அங்கிருக்கிற தெற்கு மூலையில் பெரிய பல்லா யிருக்கி றது. அதில் கஞ்சியும், பக்கத்து சட்டியில் ஊறுகாயு மிருக்கின்றன. அங்கு போவோம் வாருங்கள். அந்த கஞ்சியில் ஆளுக்கொரு கை குடிப்போம்.'' என்று கூறி மெல்ல எழுந்து நடக்க வாரம்

பித்தார். அவருடைய மனம் என்றுமில்லாத பூரிப்பை யடைந்தது. தள்ளாடிய நிலைமையிலும் சந்தோஷத்தினால் சற்று தெளிவு பெற்றவராய் தன் கஞ்சி இருக்குமிடத்திற்கு பிரேமாவையும் பாகீரதியையும் அழைத்துச் சென்று சட்டியைக் காண்பித்தார்.

அங்கு வேலை செய்யும் மற்ற ஜனங்களெல்லாம் வெகு கொம்மாளத்துடன் தம் தம் மக்கள் பரிவாரத்துடன் உட்கார்ந்து கஞ்சி குடிப்போரும், கூழ் குடிப்போரும், சாதம் சாப்பிடுவோரும் நிர்மலமான ஹ்ருதயத்துடன் பேசிக்கொண்டிருப்போருமாக இருந்த குதூகலத்தைப் பார்த்த ப்ரேமாவுக்கு ஆநந்த மயமாகி விட்டது. கிழவருடைய பானையிலிருந்த கஞ்சியை எடுத்து அவருக்குக் கொடுத்தாள். கிழவர் அதையே முதலில் ப்ரேமாவுக்குக் கொடுத்து சாப்பிடும்படி வேண்டினார்.

ப்ரேமா கிழவரின் கருத்துப் படிக்கு சட்டியிலிருந்த கஞ்சியை மூன்று பாகமாகச் செய்து ஒன்றை கிழவருக்கும், மற்றொன்றை தன் தாயாருக்கும் கொடுத்துவிட்டுத் தானும் ஒரு தகரக் கொப்பறையில் எடுத்துக்கொண்டு அதை அம்ருதம்போன்று பருகினாள். ப்ரேமாவின் அகோரமான பசிக்கு இது முற்றிலும் தாங்கவில்லை எனினும் பெரிய தலைவரான கிழவரின் துணை தனக்கு அகப்பட்ட ஓர் பெரிய சந்தோஷமும், நம்பிக்கையுமே வயிறு நிறைந்த ஆகாரம்போலாய் விட்டது. அதோடு இக் கஞ்சி பூர்ண திருப்தியையே அளித்தது.

பாகீரதி அங்கு கூடியுள்ள ஜனங்களின் சுயேச்சையான ஆவாரத்தைப் பார்க்க அவளது மனம் அவளை யறியாது ஆச்சரியமும் ஒருவிதமான உணர்ச்சியும் அடையப் பெற்று, அக் கஞ்சியை மடமட வென்று குடித்து அவர்களையே கவனித்துக் கொண்டிருக்கிறாள். இப்படி கூட கூலி வேலை செய்பவர்களுக்கு இவ்வளவு உத்சாகமும், களியாட்டமும், எப்படி உண்டாயிற்று? கூலி வேலை—கேவலமான கல்லுடைக்கும் வேலை—செய்பவர்களுக்கு இத்தனை சந்தோஷமா! இதைப் பார்க்க வெகு ஆச்சரியமாக விருக்கிறதே!'' என்று தனக்குள்ளே எண்ணி எண்ணி இன்னதென்று புரியாத விதமாய்க் குழம்பிவிட்டாள்.

தானும் இக் கதியைத்தானே இனிமேல் அடைய வேண்டுமென்ற விசனமும் பாதித்தது. எனினும் ஒரு விதமான தைரியமும், அவர்களைப் பார்த்துக் களிப்பும் இவள் மனத்திலுண்டாகி விட்டன. "ஏன் நாம் மட்டும் இந்த ஏழைகளுடன் கூட வேலை

செய்து பிழைக்கக்கூடாது. நம்மைச் சேர்ந்தவர்களின் முன்னிலே யில் வேலே செய்தால் அது பரிகாஸமா யிருக்கும். இப்போது நம்மை யார் பார்க்கிறவர்கள். உம்...விதி'' என்று ஒருவாறு தன் ஞத் தானே தேற்றிக் கொண்டாள் என்ருலும் மனதிற்குள் பலவித மான பேத எண்ணங்களும் இல்லாமலில்லே.

ஆநந்தமாக எல்லோரும் கஞ்சியுங் கூழுங் குடித்துவிட்டுச் சிறிது நேரம் வெற்றிலே போட்டுக்கொண்டு தூங்குவோரும் வெறு மனே பேசுவோருமாக விருந்தார்கள். வேலேக்கு வரவேண்டுமென்ற மணி யடித்தது. உடனே ஒவ்வொருவரும் வெகு சுறுசுறுப்பாக எழுந்து தம் தம் இடத்திற்குச் சென்று வேலேயை செய்யத் துவக்கி ஞர்கள். பிரேமாவும் தன் வேலேயை ஆரம்பித்தாள். பாரேதி மட்டும் குழம்பிய மனத்தோடு அங்குமிங்கும் சுற்றி யலேந்துகொண்டும், எல் லோருடைய பேச்சுக்களே எல்லாம் கேட்டுக்கொண்டும் நின்ருள். நூற்றுக் கணக்கில் ஜனங்கள் உத்சாகமாக வேலே செய்வதைப் பார்த் ததும் இவளுக்கும் ஒரு விதமான ஆசை யுண்டாயிற்று. ஒரு தட்டை மேஸ்திரியிடம் வாங்கிக்கொண்டு உடைத்த கற்களே எல் லாம் வாரிக் கொட்ட வாரம்பித்தாள். இம் மாறுதலேக் கண்ட ப்ரேமாவுக்கு கூறத் திறமற்ற ஆச்சரியம் உண்டாகிவிட்டது. "எல் லாம் கடவுளின் லீலேகள். ஆவதும், அழிவதும், கூடுவதும், கெடு வதும் யாவும் அவன் செயலன்ருே! இப் பெரியாரைத் துணேக்குக் கொடுத்த ஈசன் சுகலத்திற்கும் கை கொடுக்காமலா போவார்?'' என்ற ஓர் பெரும் உறுதியான நம்பிக்கை யுண்டாகியது. கடவுளே தியா னித்தபடியே தன் தாயாருக்கு நல்ல புத்தியைக் கொடுத்து காக்க வேண்டுமென்று பிரார்த்தனே செய்தவாறு கல்லுடைத்துக்கொண்டே இருந்தாள்.

மாலே நேரம் ஆரம்பமாகிவிட்டது. மணி 5 ஆனவுடனே வேலே முடிந்துவிட்டது என்ற மணி யடித்ததும் வேலேயை விட்டு விட்டு எல்லோரும் பெரிய ஆரவாரத்துடன் எழுந்து சென்ருர்கள். இந்த தொழிலாளர்களுக்கு வெகு அவசியமாக ஒரு குளமும் அங்கு கடவுள் அமைத்து வைத்திருந்ததுபோல வெகு ரமணீயமாக விருந் தது. எல்லோரும் அக் குளத்தில் சென்று துணிகளே துவைத்துக் கொண்டு சுத்தமாக ஸ்நானம் செய்துவிட்டு சட்டி முட்டி சாமான் களே எல்லாம் கழுவித் தண்ணீர் எடுத்துச் சென்ருர்கள்.

புருஷர்களும், ஸ்திரீகளும் சமமாகவே மூன்று கற்களே வைத்து அடுப்பு மூட்டி சமையல் செய்ய வாரம்பித்தார்கள். அருகி லிருக்கும் கீரைகள், காய்கறிகள் ஏதேனும் கிடைத்ததை சேகரித்

திச் சமைக்கத் துவக்கினர்கள். ப்ரேமாவும் அக் குளத்தில் ஆயாசமும் களேப்பும் தீர ஸ்நானம் செய்துவிட்டு தானும் சமயல் செய்ய வாரம்பித்தாள். இந்த ஆநந்தம் அவளுக்கு என்றும் மறக்கக் கூடாததாகத் தோன்றியது. ஒரு பானேயில் சோறும் மற்றொரு பானேயில் குழம்பும் வைத்தாள்.

முதலில் கடவுளுக்கு நிவேத்தியம் செய்துவிட்டுக் கிழவருக்கு அன்போடு பரிமாறினள். தாயாருக்கும் போட்டுவிட்டுத் தானும் சாப்பிட்டாள். மறு தினத்து இரண்டு வேளே யாகாரத்தையும் தயார் செய்து மூடி வைத்துவிட்டு வந்தாள். நல்லிருள் சூழ்ந்துவிட்டது. சிறிய சிறிய காடா விளக்குகளின் ஒளி மட்டும் எங்கோ மின்மினி பறப்பதுபோலப் பிரகாசிக்கின்றது. எல்லா ஜனங்களும் திறந்த—பரந்த—ஆகாய வெளியிலே உட்கார்ந்து பாட்டும் கதையும் வேடிக்கையும் விநோதமுமாகப் பொழுதைப் போக்கிருர்கள்.

ப்ரேமாவும் பரந்த பூமிதேவியின் மீது உட்கார்ந்து ஆகாயத்திலுள்ள இயற்கை வனப்பையும், ஜனங்களின் ஆரவாரங்களேயும் பார்த்துப் பார்த்துப் பூரித்தவாறு எண்ணுததும் எண்ணி இன்ப வடிவமான கடவுளின் லீலா விநோதங்களேப் பற்றி அதிசயித்துக் கொண்டிருந்தாள். பாகீரதியும் கிழவரும் ஆயாசத்தினல் அயர்ந்து நித்திரை போய்விட்டார்கள். சிறிது நேரத்தில் மற்ற ஜனங்களும் தூங்கிவிட்டதால் வெகு விரைவில் நிச்சப்தமாகிவிட்டது. ஆனல் பிரேமாவுக்கு மட்டும் புதிதான இடமாதலால் நித்திரையே கொள்ளவில்லே. தன்னுடைய கழிந்த வாழ்நாட்களேயும்—எதிர்கால வாழ்க்கையின் நிலே யறியாத தோற்றத்தையும் ஒருங்கு கூடி சிந்தித்தவாறு படுத்திருந்தாள்.

ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள் எல்லாம் நிர்மலமாகப் பிரகாசிப்பதானது ப்ரேமாவுக்கு ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிப்பினேயைப் போதித்து ஐக்கிய பாவத்தையும், ஒற்றுமையையும், விடா முயற்சியையும் காட்டுவது போல விருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அவளும் அயர்ந்து தூங்கிவிட்டாள்.

வெகு ஆநந்தகரமாகப் பொழுது புலர்ந்தது. எல்லோரும் எழுந்து தம் தம் காலேக் கடன்களே முடித்துக்கொண்டு கடவுளேத் தொழுது பின் கஞ்சி குடித்துவிட்டு மணி யடிப்பதை எதிர் பார்த்திருந்தார்கள். மணி யடித்ததும் எல்லோரும் எழுந்து பரபரப்பாக வேலேக்குச் சென்றுர்கள். இவ்விதமே தினந்தோறும் வெகு ஒழுங்

காக நடந்தது. பிரேமா மட்டும் வாரத்திற்கொரு நாள் அந்த ஊர் முத்துக் குமரஸ்வாமியின் கோயிலுக்குத் தன் தாயாருடன் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு விபூதி பிரஸாதத்தை வாங்கி வந்து கிழவருக்குக் கொடுத்து வந்தாள்.

இவ்விதமே ஆநந்தமயமாக வேலை நடந்துகொண்டிருந்தது. சில தினத்திற்குள்ளேயே ப்ரேமா அங்குள்ள எல்லோருக்கும் அறிமுகமாகி வெகு சாதாரணமாகப் பழகிவிட்டாள். அதற்குமேல் தினந்தோறும் மாலையில் எல்லோரும் ஸ்நானம் செய்து சமயல் செய்த பிறகு ப்ரேமா சகல ஜனங்களையும் உட்கார வைத்து பகவன்னாமத்தை பஜனை செய்வதற்கு கற்றுக்கொடுக்க வாரம்பித்தாள் ப்ரேமாவின் இனிமையான சாரீர கானம் அறிவே இல்லாத பாமர மக்களையும் பரவசமாக்கிவிட்டது.

சங்கீதம் தன் முழு சக்தியையும் காட்டி எல்லோரையும் தன் வயமாக்கிவிட்டது. அதற்குமேல் ப்ரேமா அந்த பகவன்னாமமாகிய பஜனைப் பாட்டைப் பாடியதும் அதனுடைய தத்துவார்த்தத்தை ஜனங்களுக்கு போதிப்பள். இதனால் மக்கள் இன்னும் ஒரு படிக் கட்டு ஏற வாரம்பித்தார்கள். பிரேமா அத்தனை ஜனங்களின் குருவாக மாறினாள். பின்னும் சில தினத்தில் பட்டினத்தடிகள், நந்தனார், பாணன், ராமானுஜர், நாயன்மார்கள் முதலியவர்களின் சரித்திரங்களைக் கதை ரூபமாகச் சொல்ல வாரம்பித்தாள்.

மக்களின் அறிவு இன்னும் சற்று விசாலமாகியதோடு இத்தகைய அருமையான மற்ற சரித்திரங்களைத் தாமே நேரில் படிக்க வேண்டுமென்ற ஆவல் உதித்தது. அந்த விதமான ஆவலைக் கிளப்ப வேண்டுமென்றே பிரேமா எதிர்பார்த்துச் செய்தாளாதலால் இந்த சந்தர்ப்பத்தை யறிந்ததும் அவர்களுக்கு ஆனா, ஊனா கற்றுக் கொடுக்க வாரம்பித்தாள். பிரேமா அங்கு வந்து சேர்ந்த சில மாதத்திற்குள்ளேயே அங்குள்ள அநேகருக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கும் சக்தி உதயமாகிவிட்டது. ப்ரேமாவின் கீர்த்தியைக் கூற வேண்டுமா? அவள் ஓர் திலகமாக விளங்கினாள்.

பிரேமா தன் புத்தியைக் கொண்டே ஓர் பெரிய காரியத்தை சாதிப்பதைக் கண்ட கிழவரின் உள்ளம் பூரித்தது. பாகீரதியும் புனர் ஜென்மம் எடுத்தது போலாய்விட்டாள் என்றால், மற்றதைக் கூறவேண்டுமா?

182970